விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com




# வலம்புரி சங்குநாதம்

சங்கு 23
ஒலி 357 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 25 ஞாயிற்றுக்கிழமை (11.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு

## இலங்கை இராணுவ அதிகாரிக்கு தடை விதித்தது அமெரிக்கா

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமை தினத்தை (டிசம்பர் 10) முன்னிட்டு, மனித உரிமை மீறல்களுக்காக மற்றொரு இலங்கை இராணுவ அதிகாரி மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் வகையில் அமெரிக்கா இதனை அறிவித்துள்ளது.

19

### அதிக புகை வெளிவிடும்

## வாகனங்கள் தொடர்பில் முறையிட முடியும்

### மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

(கொழும்பு)

சாலையில் அதிக புகையை வெளியிட்டு செல்லும் வாகனங்களின் புகைப்படங்களை எடுத்து, வாகன இலக்கம், நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புமாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வட்ஸ்அப் அல்

19

## வவுனியாவில் உறவுகள் பேரணி




03

## நிதி சேகரிக்கும் பாணியில் கொள்ளை

### அச்சுவேலியில் சம்பவம்

(அராலி)

யாழ்.அச்சுவேலி - பத்தைமேனிப் பகுதியில் நேற்றுக் காலை வீடுகளுக்கு சென்று ஊனமுற்றவர்களுக்கு நிதி சேகரிப்பதாகக் கூறிய நபர் வயோதிபர் ஒருவருடைய வீட்டிலிருந்து 50 ஆயிரம் பெறுமதியான

19

## ஜனாதிபதி - கூட்டமைப்பு

# 13ஆம் திகதி சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



(19ஆம் பக்கம் பார்க்க)

## திருட்டில் கைதேர்ந்தவர் நேற்று சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவரும் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற நபர் நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸாரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

19

## வல்லையில் விபத்து

### ஒருவர் பலி



19

### மாகாண, மாவட்டங்களுக்கிடையே

## ஆடு, மாட்டிறைச்சி கொண்டு செல்லத் தடை

(கொழும்பு)

கடந்த இரு தினங்களாக நாட்டில் நிலவிய கடும் குளிருடனான காலநிலை காரணமாக வடக்கில் சுமார் 500 கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், பொதுச் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில்

19

## கடன் மறுசீரமைப்பு சீனா பச்சைக்கொடி

### ஐ.எம்.எப் தகவல்

(கொழும்பு)

சாம்பியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு குறித்த சீனாவுடனான பேச்சு பயனுள்ள வகையில் நிறைவடைந்துள்ளதாக ஐ.எம்.எப். தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கான விரைவான

19

## அரச துறைகளில் பணியாற்றும் 32 ஆயிரம் பேர் நிரந்தர சேவைக்குள்

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பல துறைகளிலும் பணிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 32 ஆயிரம் பேரும் அடுத்த வருட ஆரம்பத்தில் அரசாங்க நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவர்கள் தற்போது பல வேறு அரசாங்க நிறுவனங்களில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு சிறந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## கந்தையா வேலாயுதபிள்ளை



மண்ணில் 1937.09.14 விண்ணில் 2022.12.09

யாழ்ப்பாணம், தென்மராட்சி - வரணியைப் பிறப்பிடமாகவும் கண்டாவளை, வரணி ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட கந்தையா வேலாயுதபிள்ளை அவர்கள் கடந்த 2022.12.09ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மை மண இணையரின் பாசமிகு மகனும் கண்டாவளையைச் சேர்ந்த காலஞ்சென்ற சித்தர் குமாரவேலு - சின்னப்பிள்ளை மண இணையரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பராசக்தியின் பாசமிகு கணவரும் விஜயகுமார் (இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னாள் நடத்துனர்), சுகுணகுமாரி, வேணுகுமாரி (முன்னாள் ஆசிரியை - கிளி/முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி), காலஞ்சென்ற பகீரதகுமார் (மூத்த தளபதி பிரிகேடியர் தீபன்) மற்றும் சிவஞானகுமாரி (ஆசிரியை - யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற சிவகுமார் (லெப்.கேணல் கில்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனந்தநீலா, அனந்தசேகரன், லோகநாதன், குமாரி, சிறீதரன் (பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்) ஆகியோரின் மாமனாரும் கோபினா, கோபிசன், அனோஜா, சிறிதரன், அஜிந்த், கீர்த்தனா, அருணியா, அஜந்தூரன், லக்சன், லக்சனா, சாரங்கன், பிரணவன், பிரவினன், ஆர்த்தி, பகீரதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் அஞ்சனா, ஆசா, அஸ்மி, அகானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (2022.12.12) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் முரசுமோட்டையில் அமைந்துள்ள அவரது மூத்த மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அன்னாரின் குடும்ப மயானமான யாழ்.வரணி - குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்; உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5472) தகவல்: குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர் திருமதி மீனலோஜினி சுப்பிரமணியம் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பராசக்தி அங்கையா



அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மண்ணில் 1940.09.26 விண்ணில் 2022.12.10

(13730)

ஆசிரியர் நல்லுறவுக் கழகம்
யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 076 097 3127

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் இராசரத்தினம் ஐயா அவர்களின் அன்பு மகள்

## திருமதி திலகவதி மாணிக்கவாசகர்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
திருநெல்வேலி


(C-5473)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை தேவராஜா

(இளைப்பாறிய புகையிரதத் தலைமை பாதுகாவலர்)

தோற்றம் 11.06.1940 மறைவு 09.12.2022



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் இல. 05, புருடி முன் ஒழுங்கை, அரியாலை யாழ்ப்பாணம், இல. 28 3/4, Frazer Avenue தெகிவளை கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய புகையிரதத் தலைமை பாதுகாவலராகிய ஐயாத்துரை தேவராஜா 09.12.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - செங்கமலம் தம்பதிகளின் ஆசைப் புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இளைப்பாறிய சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் திருமதி தேவராஜா நேசமலரின் ஆருயிர்க் கணவனும் பீஷ்மன், அரவிந்தன், கௌரிபாகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவாஜினி, நீலகி, பாலமதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தேஜஸ்வனி, அநீந்தகி, றுக்ஷினி நேசாத்மிகா, அவிநிகன், பாலாத்மிகன் ஆகியோரின் ஆசைப் பேரனும் காலஞ்சென்ற செல்வராஜா, சிவராஜா மற்றும் செல்வராணி, கமலராணி, நவரட்ணராஜா ஜெயரட்ணராஜா, குணரட்ணராஜா, ஜமுனாராணி, நித்தியானந்தராஜா ஆகியோரின் அருமைச் சகோதரனும் சாராதாவின் உடன்பிறவாச் சகோதரனும் கணேசதாசன், கமலாம்பிகை, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் மங்களராஜேஸ்வரி, ராஜேந்திரன், அருமைத்துரை, சசிலாதேவி, சாரதாம்பிகை, குகானந்தி, சக்திதாசன், உருத்திராதேவி, ராஜேஸ்வரி, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற மாசிலாமணியின் சகலனும் ஹரிப்பிரவீனின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இலக்கம் 05 புருடி முன் ஒழுங்கையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பீஸ்மன் - 077 773 8017
அரவிந்தன் - 076 735 7593
கௌரிபாகன் - 077 261 9757

(13729) தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு

# வவுனியாவில் உறவுகள் மாபெரும் பேரணி!

(வவுனியா)

**மனித உரிமைகள் தினமான நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**





குறித்த பேரணி வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், மனித உரிமை அமைப்புகள், மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை வவுனியா கந்தசுவாமி கோவிலின் முன்னால் ஆரம்பமான குறித்த பேரணி பஜார் வீதியினூடாக பழைய பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது.

இப்பேரணியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4)

## இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இன்று பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகா கவி சுப்பிரம்ணிய பாரதியாரின் 140 ஆவது பிறந்ததின நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் "பாரதி நம் நெஞ்சில் ஆழப் பதிவது பக்திக் கவிதைகளாலா? சமூகக் கவிதைகளாலா?" என்ற சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற உள்ளது.

அணிசெய் பேச்சாளர்களாகப் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன், இ.வாசுதேவா, ந.விஜயசுந்தரம், செந்தமிழ் சொல்லருவி க.லலீசன் ஆகியோர் பங்கு பற்றி தமது வாதங்களை முன்வைப்பார்கள்.

நிகழ்வின் தொடக்கமாக நீர்வேலி பொன்சக்தி கலா கேந்திரா மாணவர்களின் பாரதி பாடல் நடனமும் இடம் பெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு இந்தியத் துணைத்தூதரகம் கேட்டுள்ளது. (4).

## முட்டையை ரூ.50 இற்கு மேல் கொள்வனவு செய்யாதீர்கள்

### முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

நுகர்வோர் முட்டையை 50 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யக்கூடாது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவரான ஆர்.எம். சரத் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது முட்டைகளுக்கு தட்டுப்பாடு இல்லை. எதிர்வரும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது.

நாடு முழுவதிலும் குறிப்பாக மேல் மாகாணத்தில் சில்லறை விற்பனை கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளால் முட்டைக்கு செயற்கையாக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் முட்டை விலையை அதிகரிக்கும் என்று சில வியாபாரிகள் தற்போது வேண்டுமென்றே முட்டைகளை விற்பனை செய்வதை தவிர்த்து வருகின்றனர்.

50 ரூபாவிற்கு மேல் முட்டைகளை விற்பனை செய்ய முடியாது என அரசாங்கம் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இருப்பினும் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில், நுகர்வோர் கட்டுப்பாட்டு விலையை விடக் குறைந்த விலையில் முட்டைகளை கொள்வனவு செய்ய முடியும்.

எனவே நுகர்வோர் முட்டையை 50 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யக் கூடாது எனவும் தெரிவித்தார். (4)

## மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும் அடுத்த வருடமும் மின் தடைப்படும்

### இலங்கை மின்சார சபை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும் அடுத்த வருடமும் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நீர்த்தேக்கங்களில் நீர்ப் பற்றாக்குறை, நிலக்கரி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அடுத்த வருடம் மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அதன் பேச்சாளர் தெரிவித்தார்.

நிலக்கரி மற்றும் எரிபொருளைப் பெறுவதற்கு டொலர்கள் கிடைக்காத பிரச்சினை காரணமாக் அடுத்த வருட ஆரம்பத்தில் தொடர்ந்து மின்சார விநியோகத்தை வழங்க முடியாது என கூறினார்.

மின்வெட்டை நிறுத்த மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என. அமைச்சர் கூறியுள்ள நிலையில் எவ்வாறாயினும் மின்சாரம் துண்டிக்கப்படும் என்பதனால் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என மின்சார சபைக்கு யோசனை தெரிவித்துள்ளனர். (4)

## தேசிய பட்டியல் மூலம் கோட்டா பாராளுமன்றம் வர முயற்சி?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்திற்குள் அழைத்து வர மொட்டு கட்சி ஒரு குழுவினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக தெரியவருகின்றது.

நாட்டில்ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து வெடித்த மக்கள் புரட்சியால் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை துறந்தார்.

நாட்டிலிருந்து ரகசியமாக வெளியேறிய கோட்டாபய வெளிநாட்டுக்கு சென்று அங்கிருந்தே தனது இராஜினாமாக் கடிதத்தை அனுப்பினார்.

அதன்பின்னர் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தேர்வுசெய்யப்பட்டு பதவியேற்றார். அத்தோடு மக்கள் போராடங்கள் ஒடுக்கப்பட்டன.

அதன் பின்னரே கோட்டாபய நாட்டுக்கு திரும்பியிருந்தார். இந் நிலையிலேயே கோட்டாவை பிரதமராக்குவதற்கான ஏற்பாடுகள்



இடம்பெற்று வருகின்றன.

இதற்காக அவரை பாராளுமன்ற உறுப்பினராக்குவதற்கு மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலர் முற்படுகின்றதாகவும் அரசியல் வட்டார தகவல்கள் கூறுகின்றன. (4)

## தமது சொத்துக்களை விற்று உணவை உண்ணும் மக்கள்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் மக்கள் தங்கள் சொத்துக்களை விற்று குறைவாக உணவுண்ணும் நிலை காணப்படுவதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் வரலாற்றில் மிக மோசமான நாணய வீழ்ச்சி காரணமாக வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ள இலங்கையர்கள் வாழ்க்கை நல்ல விதத்தில் காணப்பட்ட காலத்தில் சேர்த்த சொத்துக்களை விற்கின்றனர்.

மிகக் குறைவாக உணவு உண்கின்றனர் என உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதம் குடும்பங்களின் உணவு பாதுகாப்பு நிலை குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இந்த விபரங்கள் தெரியவந்துள்ளன.

பத்தில் மூன்று குடும்பங்கள் உணவுப்பாது காப்பற்ற நிலையில் காணப்படுகின்றன.

பத்தில் ஏழு குடும்பங்கள் மிகவும் குறைவாக விரும்பப் படும் உணவை உண்ணுதல் போன்ற உணவு தொடர்பான மூலோபாயங்களை பின்பற்றுகின்றன.

ஜூன் மாதம் முதல் இந்த போக்கை அவதானிக்க முடிகின்றது என டிசெம்பரில் வெளியிட்டுள்ள அறிக்கையில் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராசேந்திரம் சிவபாலு

(உரிமையாளர் - அனோஜன் வார்ப்புத் தொழிற்சாலை, வட்டுக்கோட்டை)



மண்ணில் 1955.07.13 விண்ணில் 10.12.2022

66/14, மூத்த விநாயகர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் 79, மூத்த விநாயகர் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட இராசேந்திரம் சிவபாலு (உரிமையாளர் - அனோஜன் வார்ப்புத் தொழிற்சாலை, வட்டுக்கோட்டை) அவர்கள் (10.12.2022) இரவு 8 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் செல்லப்பா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் அனோஜன் (பிரான்ஸ்), நிசாந்தன் (ஆசிரியர் - மல்லாகம் மகா வித்தியாலயம்), பிரவினா, சதீஸ்காந் (ஆசிரியர் மாணவன் - தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவித்ரா்வின் (ஆசிரியை - கௌரி அம்மாள் மகா வித்தியாலயம், மன்னார்) அன்பு மாமனாரும் சரஸ்வதி, காலஞ்சென்ற சிவஞானராசா (ஜேர்மன்), அருளானந்தராசா,. சந்திரவதி, கனகராசா (பிரான்ஸ்), குணவதி (ஜேர்மன்), இந்திரா (கனடா), சுரேந்திரா, சுரேந்திரராஜன் (லண்டன்), தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (11.12.2022) பி.ப 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(13788) தகவல்: குடும்பத்தினர்

# உலகக் கிண்ண கால்பந்து அரையிறுதிக்குள் ஆர்ஜென்டீனா

கட்டார் நாட்டில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கால்பந்து தொடரில் நள்ளிரவு லுசைல் கால்பந்து மைதானத்தில் தொடங்கிய 2 ஆவது கால் இறுதிச் சுற்றில் ஆர்ஜென்டீனா அணி நெதர்லாந்தை எதிர் கொண்டது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின். 35 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டீனா வீரர் மொலினா முதல் கோலை அடித்து அணியை முன்னிலை பெறச் செய்தார். இதனால் முதல் பாதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனா முன்னிலை வகித்தது.

2 ஆவது பகுதியின் 73 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி ஆர்ஜென்டீனாவுக்கான 2 ஆவது கோலை அடித்தார். இதனால் வெற்றி ஆர்ஜெ டீனா பக்கம் இருந்தது. எனினும் நெதர்லாந்து வீரர் வெக்ஹோர்ஸ்ட் 83 ஆவது நிமிடத்தில் தமது அணிக் காக முதல் கோலை அடித்தார். தொடர்ந்து கூடுதல் நேரம் வழங்கப்பட்ட போது 11 நிமிடங் களில் அவரே இரண்டாவது கோலை அடித்து ஆர்ஜென்டீனா அணியின் வெற் றிக்கு முட்டுக் கட்டை போட்டார். கூடுதல் நேர ஆட்டத்தின் முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தன. (4)


## விற்பனைக்கு

- இந்தியனின் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
- KDh 200 PD-xxxx E 2007 விற்பனைக்குண்டு.
- Euro power 8 KVA ஜெனரேட்டர் ஊர்தியுடன் விற்பனைக்குண்டு.

077 773 0567

(13734)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி ஜெயப்பிரியா பத்மநேசன்
அவர்களின் பாசமிகு தாயார்



### அமரர் ஜெயபத்மினி யோகராஜா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

(C-5475)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 02 . 1930

மறைவு 25 . 11 . 2018

### அமரர் இராசம்மா பொன்னுத்துரை

(மண்டைதீவு - 6 ஆம் வட்டாரம்)

"பத்து மாதம் சுமந்து எமை
பத்திரமாய் வளர்த்து வளமான
வாழ்வு தந்து வழி காட்டியாய்
நின்ற தாயே!
எம் உயிருள்ளவரை உனை நாம் மறவோம்
நாளும் பொழுதும் நின்னை
தோளில் சுமந்து ஆராரோ பாடி
அள்ளி முத்தமிட எம்மிடத்தில்
ஓடோடி வந்திடம்மா"

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.50, சபாதி வீதி,
தலையாழி,
கொக்குவில்.

(13737)

நின் நினைவில் வாழும்
குடும்பத்தார்

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 14 . 01 . 1929

மறைவு 09 . 12 . 2022

### அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே?
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்
துளிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

இல. 144/2,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பழமுதிர்ச்சோலை
காரைநகர்.

(13736)

பிரிவால் துயருறும் பாசமுள்ள
பெறாமகன் கனகசபை தர்மகுலசிங்கம்,
மருமகள் தனலட்சுமி தர்மகுலசிங்கம்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் மோசமடையும் காற்றின் தரம்!



(கொழும்பு)

இலங்கையில் கொழும்பு உள்ளிட்ட சில இடங்களில் காற்றின் தரம் மீண்டும் மோசமான நிலையை எட்டியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) தெரிவித்துள்ளது.

நேற்று காலை 8 மணி வரையான நிலவரப்படி காற்றின் தரம் மீண்டும் மோசமான நிலையை எட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவுறுத்தலில், நாட்டின் சில பகுதிகளில் காற்றின் தரச்சுட்டெண் 190 ஐ விட அதிகரித்துள்ளது.

அந்த வகையில் பார்த்தால் கொழும்பில் 191 ஆகவும் பதுளையில் 169 ஆகவும் கேகாலையில் 155 ஆகவும் காற்றின் தரச்சுட்டெண் பதிவாகியுள்ளது. இதே வேளை களுத்துறையில் 146 ஆகவும் கண்டியில் 126 ஆகவும் இரத்தினபுரியில் 114 ஆகவும் குருநாகலையில் 106 ஆகவும் காலியில் 97 ஆகவும் காற்றின் தரச்சுட்டெண் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் சுமார் ஒரு தசாப்தத்தின் பின்னர் வளிமண்டலத்தில் அதிகளவான மாசு படிந்திருந்ததாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்திருந்தது. எனினும் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தூசுப் படிமங்கள் நேற்று முதல் குறைவடையும் என்றும் வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது. (4)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 1952 – 02 – 24



வானுலகில் 2015 – 11 – 29

திருமதி. தர்மலக்ஷ்மி சூரியகுமார்

திதி: சங்கடகர சதுர்த்தி

அன்பின் திருவுருவே எங்கள் அம்மாவே
எமை பத்து மாதம் சுமந்து பாரினிலே
சீருடன் வாழ வழிகாட்டிய அன்னையே
எமையெல்லாம் ஆறாத்துயரினில் ஆழ்த்திவிட்டு
சாயீசன் பாதமடைந்து ஆண்டுகள் ஏழு
ஆனதுவோ அம்மா
ஆண்டுகள் ஏழு என்ன
எத்தனை எத்தனை ஆண்டுகளானாலும்
என்றும் எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும்
எம் அன்னைக்கு எமது இதய அஞ்சலிகள்
என்றும் உங்கள் நினைவுடனேயிருக்கும்.

(13709)

72, அச்சுக்கூட வீதி
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

ந.சூரியகுமார் (கணவர்)
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.


## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்பான இறுதி முடிவு விரைவில்

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் கிரவுண்ட் சர்வீஸஸ் நிர்வாகத்தை ஏதேனும் முதலீட்டாளருக்கு அல்லது தனித்தனியாக் வழங்குவது குறித்து விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அந்த நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான வழிகாட்டுதல்களை திறைசேரியின் குழுவொன்று வழங்கும் என்றும் அதன் பின்னர் அமைச்சரவை இது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த நிறுவனங்களின் மறுசீரமைப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முதலில் பாராளுமன்றத்திற்கு தெரியப்படுத்தப்படும் என்றும் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

பெருந்தொகையில் புரளும் ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதைத் தவிர வேறு வழியில்லை எனக் கூறிய அமைச்சர், நிறுவனத்தை மறுசீரமைப்பதை மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே எதிர்க்கிறது என்றார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கடன்பட்டுள்ளதாகவும் விமான சேவைக்குச் சொந்தமான அனைத்து விமானங்களும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (4)

## இராசிபலன்

11.12.2022
கார்த்திகை 25, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பிற்பகல் 3.11 மணிவரை


புனர்பூசம் முன்னிரவு 7.58 மணிவரை
சுபநேரம் -9.19-10.49 மணிவரை
இராகுகாலம் -4.49-6.19 மணிவரை
சாங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
கேட்டை, மூலம்.


வளவன்





வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படையும் நாள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.




கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தினரின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




நண்பர்கள் சந்திப்பால் பரவசப்படுவீர்கள், தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும்.




தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், செய் தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் மேலோங்கும், வழிபாடு குதூகலம் தரும், பொது வாழ்வில் கௌரவமும் அந்தஸ்தும் உயரும்.




தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, மகிழ்ச்சி தரும் பயணமொன்று ஏற்படலாம், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், இனிய செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் [illegible]லாம்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கெட்ட நட்பை விடத் தனித்திருப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப் பதவியை அதிகரிக்க அரசிற்கு என்ன உரிமை?

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)
மக்கள் மீது வரி மற்றும் கட்டணங்களை அதிகரித்து, அரசாங்கம் அமைச்சுப் பதவிகளை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இவ்வாறு செயற்படுவதற்கு அரசாங்கத்துக்கு இருக்கும் தார்மீக உரிமை என்ன? மக்கள் ஆணை இருக்கின்றதா? எனக் கேட்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

யுனிசெப் அமைப்பு கடந்த ஜூன், ஒக்டோபர் மாதங்களுக்கிடையில் மேற்கொண்டுள்ள கணிப்பீட்டில் எமது நாட்டில் 62 இலட்சம் பேர் உணவு பாதுகாப்பற்ற நிலைக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இன்று சிறுவர் மந்தபோசணை, தாய்மார் மந்தபோசணை, தொழிலின்மை, மருத்துவர்கள் உட்பட புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றமை போன்றன பாரிய பிரச்சினையாகி இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், அரசாங்கம் மேலும் புதிய அமைச்சர்களை நியமிக்க முயற்சிக்கின்றது. இவ்வாறு அமைச்சர்களை நியமித்துக் கொள்ள அரசாங்கத்துக்கு இருக்கும் தார்மீக உரிமை என்ன?

வரவு-செலவுத் திட்டம் மூலம் மக்களுக்கு பாரியளவில் வரி அதிகரிப்பு செய்து, கட்டண அதிகரிப்பு செய்து, மக்கள் மீது எரிவாயு, மின் கட்டணங்களை அதிகரித்து, அரசாங்கம் அமைச்சுப்பதவிகளை வழங்கப் போகின்றது.

இவ்வாறு அரசாங்கம் செயற்படுவதற்கு அரசாங்கத்துக்கு இருக்கும் மக்கள் ஆணை என்ன என கேட்கின்றேன் எனத் தெரிவித்தார். (4)


## மணமகன் தேவை

1991. யாழிந்து. ரேவதி. Administrative Officer சாவகச்சேரி. மணமகள் பதிவு இல: 7674. பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04
அழையுங்கள் : 076 664 9401. (c-1872)

## மணமகன் தேவை

1990. யாழிந்து. ஸ்வாதி. Teacher வல்வெட்டித்துறை மணமகள் பதிவு இல: 7750. பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04
அழையுங்கள் : 076 664 9401. (c-1872)

## மணமகன் தேவை

1986. யாழிந்து. சதயம். Doctor அல்வாய் மணமகள் பதிவு இல: 7206. பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04
அழையுங்கள் : 076 664 9401. (c-1872)

## மணமகள் தேவை

1992. யாழ்.கிறிஸ்தவம். திருவோணம். Chef, France, மணமகன் பதிவு இல: 8007. பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriage Service. com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04
அழையுங்கள் : 076 664 9401. (c-1873)

## மணமகள் தேவை

1990. யாழிந்து. சதயம். Electronic & Telecommunication Engineer, Australia மணமகன் பதிவு இல: 8279. பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd.,Colombo 04
அழையுங்கள் : 076 664 9401. (c-1873)

## மணமகள் தேவை

1989. யாழிந்து. கார்த்திகை. Finance Analyst, London, மணமகன் பதிவு இல: 8265. பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd.,Colombo 04
அழையுங்கள்: 076 664 9401. (c-1873)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் நன்னடத்தை மற்றும் நல்வாழ்வு மையமும் தனிநபர் தொழில்முறை விருத்திக்கான துறையும் இணைந்து போதைப் பொருள் பாவனையும் அதன் பல்வகைக் கண்ணோட்டமும் பிரதிபலிப்புகளும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட கூவர் அரங்கில் நடைபெற்றது. (படம்:-கஜிந்தன்)



மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரின் ஏற்பாட்டில் பால் நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்றிட்டத்தின் நிறைவு தினத்தை முன்னிட்டு சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் விசேட நிகழ்வு இடம்பெற்றது. (படம்:-கஜிந்தன்)

# அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
கல்விக்கான சமூகப் பணி அமையமான பாரி அறக்கட்டளையின் நிறுவுனரும், லண்டனில் உள்ள ஒரு அறினா நிறுவனத்தின் மின் பொறியியலாருமான நடராசா விமலரஞ்சிதன் அண்மையில் இங்கிலாந்தில் காலமானார். அவருக்கான அஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் காலையடி பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் அறக்கட்டளை இயக்குநர் ச.நிகேஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)



மகப்பேற்று மருத்துவ நிபுணர் கலாநிதி கந்தையா குருபரன் எழுதிய தாயாகிய தனித்துவம் என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை யாழ்.போதனா மருத்துவமனை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது. மருத்துவ நிபுணர் சி.சிவன்சுதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மருத்துவ கலாநிதி திருமதி. ஜெ.கணேசமூர்த்தி முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். (படம்:-சிவசாந்தன்)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை மழலைகள் பூங்காவில் 2022 இல் முன்பள்ளிக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது இன்று மாலை 3 மணியளவில் முன் பள்ளி அரங்கத்தில் முன்பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் இராமநாதன் சேதுநாதன் மகாஜனன் தலைமையில் இடம்பெவுள் ளது. (4)

# 'யூலை காற்றில்' பாடல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
MM புரொடக்ஸன் தயாரிப்பில் நந்தாவின் அடுத்த வெளியீடான "யூலைக்காற்றில்" பாடல் Spotify, youtube இல் வெளியாகியுள்ளது. புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் இவர் இசை யமைப்பாளர், பாடலாசிரியர், பாடகர் என்னும் பல முகங்களை தன்னகத்தே கொண்டு 2017 இல் இருந்து என் காதல் தோழா, துருக்கி அழகி, தீம் பாவை, தற்போது யூலைக் காற்றில் போன்ற பாடல்களை செய்து வரும் ஈழத்துக் கலைஞர் ஆவார். (4)



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட "அனைவருக்கும் கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி" என்னும் தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் தினமானது நேற்று யாழில் உள்ள கியூடெக்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய பணிப்பாளர் த. கனகராஜ் கலந்துகொண்டார். (படம்:-கஜிந்தன்)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
யாழ். வேலணை வடக்கு, சரவணை கிழக்கு பாலையம்பதி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 7.29 முதல் 8.41 மணி வரை இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 320 | 400 | 350 | 400 |
| தக்காளி | 200 | 250 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 200 | 150 |
| கோவா | 200 | 200 | 260 | 240 |
| கரட் | 200 | 380 | 400 | 400 |
| பூசணி | 100 | 100 | 120 | 120 |
| புடோல் | 200 | 220 | 180 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 600 | 500 | 650 | 600 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 200 |
| பாக்ற்காய் | 500 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 160 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 450 |
| லீக்ஸ் | 400 | 400 | 420 | 450 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 700 | — | 1000 |
| போஞ்சி | 250 | 250 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 230 | 100 | — | 180 |
| கீரை - 1 பிடி | 180 | 150 | 200 | 160 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 | 260 |
| வெங்காயப்பூ | 450 | — | — | — |
| முள்ளங்கி | 150 | 220 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 120 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 160 | 120 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 374
Viber 076 636 3378



# மக்கள் உரிமைகளை வென்றெடுப்பதே மக்கள் பிரதிநிதிகளின் கடமை

**“ மக்களுடன் மக்களாய் ஒன்றிணைந்து செயற்படுவதும் அவர்களின் நலன் சார்ந்து சிந்திப்பதும் மக்களுக்காக எந்த நிலைக்கும் இறங்கத் தயாராக இருப்பதுமே மக்கள் பிரதிநிதிகளின் கடமை. ”**

— அபிமன்யு

எளிமை என்பதற்கு பலருக்கு அர்த்தம் தெரிவதில்லை என்பது தான் உண்மை.

பணம் படைத்தவர்களில் சிலர் எளிமை என்பது உடை சார்ந்தது என்று எண்ணி இடம், பொருள், ஏவல் அறியாது செயற்படுவது நகைச்சுவையை ஏற்படுத்துமே தவிர அவர்களின் நடவடிக்கைகள் ஒரு நாளும் எளிமையானதாய் அமைந்து விடாது.

மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த எம் அரசியல் தலைவர்கள் எளிமையானவர்களாக இருக்கிறார்களா?மக்கள் சந்திப்புக்களை நடத்துகிறார்களா? குறிப்பிட்ட நாளை ஒதுக்கி தமது அலுவலகத்தில் இருந்து செயற்படுகிறார்களா என்ற கேள்வி இங்கு எழும்.

இவை அனைத்தும் நடைபெறுகிறதா என்றால் இல்லை என்பதே பதில்.

மக்களின் வாக்குகளை தமதாக்கும் வரை அவர்கள் மக்கள் பக்கத்தில் இருப்பர்.

அதன்பின் அவர்கள் மக்களுக்கு அந்நியப் பட்டுச் சென்று விடுவர். இங்கு தான் இவர்களின் சுயரூபம் வெளிப்படத் தொடங்கிவிடும்.

கொரோனாவுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களால் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தது. குறிப்பாக பொருட்களுக்கான தட்டுப்பாடு மிகக் கடுமையாய் ஏற்பட்டதுடன் பொருட்களைப் பதுக்கி பன்மடங்கு அதிக விலைக்கு விற்கும் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக நடைபெற்றன.

ஆனாலும் மக்கள் வரிசையில் காத்திருந்து பொருட்களை வாங்கவே செய்தனர்.

அதிலும் எரிபொருள், எரிவாயு என்பவற்றிற்கான வரிசையை நாம் சாதாரணமாக மறந்து விட முடியாது.

காலை 5 மணிக்கு வரிசைக்குச் சென்று மாலை 6 மணிக்கு இரண்டு லீற்றர் பெற்றோலை பெற்றுச் சென்ற கொடுமைகள் கூட நடந்தேறின.



கடும் வெயில்,மழையைக் கூட பொருட்படுத்தாது மக்கள் வரிசையில் நின்றதான வரலாறுகளை நாம் மறக்க இயலாது.

இவ்வாறு வரிசையில் நிற்பவர்களிற்கு தன்னார்வலர்கள் தண்ணீர் போத்தல்கள் ,குளிர்பானங்கள் என்பவற்றை வழங்கியமை இன்னும் தமிழினத்திடம் மனிதாபிமானம் வாழ்கின்றதென்பதை பறைசாற்றுகின்றது.

இங்குதான் எமது அரசியல்வாதிகளின் தமிழ் மக்களிடத்திலான ஒவ்வாமை வெளிப்பட்டு நிற்கிறது.

வடக்கு முழுவதும் கண்ட இடமெல்லாம் வரிசையில் மக்கள் வெயில், மழை பாராதுகாத்துக்கிடக்க ஏசி வாகனங்களில் மக்களின் கஷ்டங்களை கண்டு கொள்ளாமல் எம் அரசியல்வாதிகள் சென்று வந்தார்கள் எனின் அவர்களின் மனநிலை எம் மக்களின் நலன் சார்ந்ததாக எப்படி இருக்க முடியும். ஒருமுறையேனும் அவர்களின் மனசாட்சி உறுத்தவில்லை என்றால் அதன் பொருள் என்னவாக இருக்கும்.

மக்கள் பிரதிநிதிகளான நீங்கள் மக்களுடன் வரிசையில் நின்று கஷ்டப்படாவிட்டாலும் அவர்களின் கஷ்டம் அறிந்து செயற்பட வேண்டியது உங்கள் கடமை அல்லவா. அவ்வாறு இல்லை எனின் உங்களை மக்கள் பிரதிநிதிகள் என எவ்வாறு கூறிவிட முடியும்.ஒரு சில அரசியல்வாதிகள் பாராளுமன்றத்துக்குள் தமிழ் மக்கள் நலன் சார்ந்த பேச்சுக்களை மிகத் தீவிரமாகப் பேசுகிறார்கள் தான்.

ஆயினும் பாராளுமன்றத்துக்குள் பேசுவது மட்டும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் வேலை இல்லையே.

மக்களுடன் மக்களாய் ஒன்றிணைந்து செயற்படுவதும் அவர்களின் நலன் சார்ந்து சிந்திப்பதும் மக்களுக்காக எந்த நிலைக்கும் இறங்கத் தயாராக இருப்பதுமே மக்கள் பிரதிநிதிகளின் கடமை.

ஆரம்ப காலங்களில் அவ்வாறான மக்கள் பிரதிநிதிகள் இருந்த போதிலும் தற்போது அவ்வாறானவர்கள் இருக்கிறார்களா என்ற ஐயம் எழவே செய்கிறது.

தற்போது கூட தமிழ் இனத்துக்கான தீர்வு விடயம் பேசபடு பொருளாக மாறியிருக்கும் நிலையில் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள்? பல தசாப்தங்களுக்கு மேல் தமிழினத்தின் பிரச்சினைக்கு தீர்வேதும் வழங்கப்படாத நிலையில் தற்போது தமிழினத்துக்கான தீர்வு தொடர்பில் ஆட்சியாளர்கள் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த வேளையில் எமது அரசியல் தலைவர்கள் செய்ய வேண்டியவை எல்லாம், தமிழினத்துக்கு எவ்வாறான தீர்வை அரசு தரப்போகிறது.

அந்தத் தீர்வில் தமிழினத்தின் அபிலாஷைகள் அடங்கியிருக்குமா? அவ்வாறு இல்லாத தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைத்தால் அதற்கு எவ்வாறான பதிலை நாம் வழங்க வேண்டும்.

எமக்குத் தேவையான தீர்வுத் திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும்.அதில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் ஒரு வேளை அரசு எம்மால் முன் வைக்கப்படும் விடயங்களைத் தர மறுத்தால் நமது செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றெல்லாம் திட்டம் தீட்டாமல் , நாம் வழங்கும் தீர்வுத் திட்டம் இது தான் என அரசு தரப்பு கூறியவுடன் தூக்கத்தில் இருந்து முழித்தவர் போல பேசி பயன் ஏதும் நடந்து விடப்போவதில்லை.

ஏனென்றால் தமிழ் மக்கள் உங்களை, உங்கள் நடவடிக்கைகளை நம்பியே உங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். தற்போது வரை உங்களை நன்றாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள்.எனவே அவர்களுக்காக கொஞ்சமேனும் பாடுபடுங்கள்.

கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழினத்துக்கான தீர்வுத் திட்டத்தை ஒன்றிணைந்து பெற முயற்சியுங்கள். எந்த நாளும் கொழும்பில் இருப்பதைத் தவிர்த்து எமது பிரதேசத்திலும் இருந்து மக்களைச் சந்தித்து அவர்கள் குறைகளைக் கேட்டறியுங்கள்.

இதுவே உங்களுக்கு வாக்களித்து உங்களை பாராளுமன்றம் அனுப்பிய ஒவ்வொரு தமிழ் ஜீவன்களின் விருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கேணல் தீபன் மற்றும் லெப் கேணல் கில்மன் ஆகியோரின் தந்தையார் க.வேலாயுதபிள்ளை அவர்கள் வரணியில காலமாகி விட்டார். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில நிலவிய அமைதியைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** இன்னமும் சாத்திரியாரைக் காணல்ல. என்ன சங்கதியோ தெரியாது.

**மூப்பர்:** இந்தக் குளிருக்கு இளம் பிள்ளைகளே ஈடுகொடுக்க முடியாமல் இருக்குது. அப்ப வயது போன வியளின்ர நிலை என்ன? சாத்திரியாரும் சுகயீனமாக இருந்தவர்...

**சிறாப்பர்:** நாங்கள் சீரோஷன நிலைகளைக் கவனிக்கிறதில்லைத் தானே. இதே குளிர் வெளிநாடுகளிலும் இருக்குது. ஆனால் அங்க குளிரைத் தாக்குப் பிடிக்கக் கூடிய உடுப்புகளை அவையள் அணியினம். நாங்கள் குளிர் எண்டாலும் வெறும் தேகத்தோட திரிவம். நிலத்தில கிடப்பம் அது போதும் தானே ஆளை மடக்க.

இவ்வாறு சிறாப்பர் கூற, அந்நேரம் பார்த்து சாத்திரியார் சதாசிவம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

இந்தா! சாத்திரியார் வந்திட்டார். நாங்கள் என்னவோ ஏதோவென்று பயந்து போனம் கங்காணி மொழிந்தார்.

இப்ப எனக்கொண்டும் நடக்காது. வாற தை மாதத்தோட சனி மாற்றம் உச்சம். அதால எனக்கு ஒரு பயமுமில்லை.

நான் ஒருக்கா செம்மணிச் சந்திக்குப் போய் அங்க இருக்கிற சிவனைப் பார்த்திட்டு வந்தனான். அதுதான் லேற்றாய்ப் போச்சுது.

**பண்டிதர்:** சொன்னாப்போல, எப்படி செம்மணிச் சிவன் இருக்கிறார்.

**சாத்திரியார்:** சிவனையும் அவருக்கு அமைக்கப்பட்ட இருப்பிடத்தையும் பார்த்து மனம் நிறைந்து போயிற்றுது.

ஒரு காலத்தில செம்மணியால பயணம் செய்யிறதெண்டாலே பயம்.

ஆனால் இப்ப, பிள்ளையார், முருகன், சிவன் என அந்த இடமே தெய்வீகத் திருவிடமாக மாறிற்று.

**வாத்தியார்:** அப்ப இனி அந்த வீதியால போறவர்கள், வாறவர்கள் ஒருக்கா இறங்கிச் சிவனை வழிபட்டுச் செல்லலாம் தானே.

**பண்டிதர்:** சிவனை- சிவலிங்கத்தை வழிபடக் கிடைப்பது மிகப் பெரிய புண்ணியம். சிவனைப் பார்த்து ஓம் நமசிவாய என்று சொன்னாலே அது தீவினையறுக்கும். நல்வினை பெருக்கும். சிவசிவ என்றிடத் தேவருமாவர் என்று திருமந்திரம் சொல்லுதல்லோ.

பண்டிதர் தந்த் விளக்கம் அனைவரையும் ஈர்த்தது. இருந்தும் பண்டிதரின் விளக்கம் விதானையார் விசுவலிங்கத்தின் முகத்தில் இனம் புரியாத கவலை ரேகையை பரப்பியது. இதனை அவதானித்த மூப்பர்; என்ன விதானையார் ஒரு மாதிரியாக இருக்கிறியள் என்ன சங்கதி.

**விதானையார்:** பண்டிதர் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

முன்பெல்லாம் ஏ-9 பாதையால பயணிக்கிற அத்தனை வாகனங்களும் பயணிகளும் முறிகண்டியில இறங்கிப் பிள்ளையாரை வணங்கி விட்டுத்தான் பயணத்தைத் தொடருவினம். அப்படியான ஒரு வழிபாடு சும்மா ஏற்பட்டதல்ல.

அந்தக் காலத்தில அந்த வீதியால பயணித்த போது ஏற்பட்ட விபத்துக்கள், ஆபத்துக்கள், யானைக் கூட்டங்களின் மிரட்டல்கள் என எல்லாம் சேர்ந்து தான் முறிகண்டிப் பிள்ளையாரை வணங்கி விட்டுப் போனால், ஒரு வில்லங்கமும் வராது என்பதை நம் மூத்த அனுபவசாலிகள் சொல்லி வைக்க; முறிகண்டிப் பிள்ளையாரை வணங்கி பயணம் தொடருகின்ற நடைமுறை ஏற்பட்டது.

ஆனால் இப்ப வாகனங்கள் எல்லாம் முறிகண்டிப் பிள்ளையாரைத் திரும்பிப் பார்க்காமல் போகுது.

அதிலும் பயணிகளை ஏற்றிச் செல்லும் சில பஸ் சாரதிகள் தங்களை விசேடமாகக் கவனிக்கிற சாப்பாட்டுக் கடைகளில பஸ்ஸை நிறுத்துவதற்காக் முறிகண்டிப் பிள்ளையாரை ஒதுக்கிப் போட்டினம்.

**சிறாப்பர்:** அப்ப, ஏ-9 வீதியில நடக்கிற வாகன விபத்துக்களுக்கு முறிகண்டிப் பிள்ளையாரிட்ட இறங்காமல் போறதும் ஒரு காரணமாக இருக்குமோ!

**விதானையார்:** உண்மை ...உண்மை... பயணத்தின் இடையில இறங்கி கால் கை முகம் கழுவி, தேங்காய் உடைத்து, கற்பூரம் ஏற்றி பிள்ளையாரை வழிபடுவதும் ஒரு தேநீரைக் குடிப்பதும் களைப்பு- சோர்வு-உறக்கம் என்பவற்றைக் கலைக்கும்.

அதிலும் கால் கழுவினால் உறக்கம் தள்ளிப் போகும். அதால சாரதி ஒரு புத்துணர்வோட வாகனத்தைச் செலுத்த முடியும். இது விபத்தைக் குறைக்கும் தானே!

**கங்காணி:** ஓ! சாரதி மற்றும் நடத்துநரை நல்லாக் கவனிக்கிற சாப்பாட்டுக் கடையில நிறுத்தினால், வயிறு முட்டச் சாப்பாடு. அப்ப உறக்கம் வரும். கண்ணை மின்னும். வீதி ஓரத்தில நிற்கிற மரம்தான் றோட்டுப் போலத் தெரியும். அப்ப விபத்து வரத் தானே செய்யும்.

**வாத்தியார்:** அப்ப இனிமேல் அத்தனை வாகனங்களும் பயணிகளும் முறிகண்டிப் பிள்ளையாரிட்ட இறங்கி அவரைக் கும்பிட்டு விட்டுப் போக வேணும். அதற்குச் சம்பந்தப்பட்ட வாகன மற்றும் பஸ் சாரதிகள் ஏற்பாடு செய்ய வேணும் எண்டொரு கோரிக்கையை ஆலடியில முன்வைப்பம்.

**சாத்திரியார்:** இப்ப முறிகண்டிப் பிள்ளையாற்ற நிர்வாகத்தை நடத்திற அமைப்பும் கொஞ்சம் விழிப்படைய வேணும். இல்லை எண்டால் உரியவர்களிட்ட ஆலய நிர்வாகத்தை ஒப்படைத்து விட்டு ஒதுங்க வேணும் என்பதுதான் என்ர கோரிக்கை.

**பண்டிதர்:** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 200 ஆவது பிறந்த நாள் இந்த ஆண்டு (2022) என்பதால நாவலர் பெருமானின் பெரும் புகழை அனைத்துத் தமிழ் மக்களும் அறியச் செய்ய வேணும்.

அதிலும் வடக்கு, கிழக்கில உள்ள அத்தனை வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளிலும் நாவலரின் உருவப் படத்தை வைத்து வழிபாடு செய்வதற்கு நம் பெரியவர்கள் ஆவன செய்யவேணும்.


நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இருந்ததாலதான் நாங்கள் இன்னமும் எங்கட அடையாளத்தோட இந்த மண்ணில வாழ்கிறம்.

ஆகையால அவற்ற ஆசி எங்களுக்குக் கிடைக்க வேணும். அவற்ற ஆசி எங்களுக்குக் கிடைத்தால் தான் எங்கள் இனம், எங்கள் குலம், எங்கள் சமயம் தழைத்தோங்கும்.

ஆகையால ஆறுமுக நாவலரின் உருவப் படத்தை வைத்து வழிபடுகின்ற ஒரு பண்பாட்டை அவரின் 200 ஆவது பிறந்த தினத்தோடு நாம் அறிமுகப் படுத்துவம்.

பண்டிதர் பரமலிங்கம் கூறியதை ஆலடியில இருந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## நாவலரின் உருவப் படத்தை எங்கும் வைத்து வழிபடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடிகை தேவிகாவின் இயற்பெயர் அவர் நடித்த முதல் படம் பற்றி கூற முடியுமா வியாசரே?

**தமிழ்** யாழ்ப்பாணம்

**எமது இளைஞர்களின் தியாகங்கள் வீண் போய்விடுமா வியாசரே?**

ஒரு நாளும் தியாகங்கள் வீண் போய் விடாது.
ஆனால் எமக்கான குறிக்கோளை அடைவதற்கு கொஞ்சம் காலம் எடுத்துக்கொள்ளும் அவ்வளவுதான்.
வாழ்நாள் ஆட்சியாளர்கள் என வர்ணிக்கப்பட்ட ராஜபக்ஷக்களுக்கு நடந்த நிகழ்வுகளைப் பார்த்திருக்கிறோமல்லவா?
இறைவனின் தீர்ப்புக்கு முன்பு எவரும் எதையும் செய்து விட முடியாது என்பது மட்டுமே நிதர்சனமானது.

**விஜயரட்ணம்** யாழ்ப்பாணம்

**ஆராய்ச்சி ஆதாரங்களின் படி இலங்கையின் ஆதிக்குடி தமிழர்களா வியாசரே?**

இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழினம் என்பதில் மறு கருத்துக்கு இடமேதும் இல்லை. ஆனால் ஆட்சியாளர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமே.
பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தனது பாராளுமன்ற கன்னி உரையில் இலங்கையின் ஆதிக்குடி தமிழ்க்குடி என்று பேசியதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் பட்ட பாட்டை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.
என்ன செய்வது வரலாறுகள் திரிவுபடுத்தப்படுகிறது என்பதை தெரிந்து கொண்டும் எம்மவர்கள் அமைதியாய் இருக்கிறார்களே என்பது தான் வேதனை.

**சுதன்** குப்பிழான்

**கடந்த காலத்தை மறந்து பேச்சு மேடைக்கு தமிழ் கட்சிகளை அழைக்கிறதே ஆளும் அரசாங்கம்?**

எப்படி கடந்த காலங்களை மறக்க முடியும்? நாம் கடந்தவை ஒன்றும் சர்வ சாதாரணமான விடயங்கள் இல்லையே.
எம் இனத்தை கருவறுத்ததை எப்படி மறக்க முடியும்.
திட்டமிட்டு எம் இனத்தின் தலைகளில் குண்டுகளை கொட்டியதை எப்படி மறக்க முடியும்.
எம் இனத்தை முட்கம்பி வேலிக்குள் அடைத்த அநியாயத்தை எப்படி மறக்க முடியும்.
காரணமே இல்லாமல் எம் இளைஞர்களை சிறையில் அடைத்து கொடுமைப் படுத்தியதை எப்படி மறக்க முடியும்.
இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதில் கூறட்டும். கடந்த காலத்தை மறப்பதைப் பற்றி நாம் சிந்திப்போம்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**அகிலன்** கனகராயன் குளம்

**வாழ்வில் மனிதனுக்கு சந்தோசமும் அமைதியும் எப்போது கிடைக்கிறது வியாசரே?**

கோடி கோடியாய் கோவில்களுக்கு கொட்டிக் கொடுப்பதிலும் ஏழைக்கு ஒரு வேளை உணவு கொடுத்துப் பாருங்கள்.
அதில் இருக்கும் திருப்திக்கு அளவே இல்லை.
பணத்தையும் பகட்டையும் ஒரு நாளும் ஆண்டவன் விரும்புவதில்லை.
ஆண்டவன் ஏழையின் சிரிப்பில் மட்டுமே வாழ்வான்.
இதைப் புரியாதவர்கள் கோடி கோடியாய் பணம் சேர்த்தால் மாத்திரம் மனிதன் நிம்மதியாக வாழலாம் என்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

**மதுவன்** மீசாலை

**நடிகை தேவிகாவின் இயற்பெயர் அவர் நடித்த முதல் படம் பற்றி கூற முடியுமா வியாசரே?**

1943 ஏப்ரல் 25 இல் பிறந்த பிரமிளாதேவி என்ற இயற்பெயரைக் கொண்டவர் தேவிகா.
இவரின் முதலாவது திரைப்படம் முதலாளி. இதில் எஸ்.எஸ்.ராஜேந்திரனுடன் இணைந்து நடித்திருந்தார்.
இவருக்கு ஒரே ஒரு மகள். அவர் தமிழ் திரைப்பட நடிகை கனகா ஆவார்.
150 திரைப்படங்களுக்கு மேல் நடித்த தேவிகா 2022 ஆம் ஆண்டு மே 2 ஆம் திகதி இயற்கை எய்தினார்.



கடந்த காலத்தை மறந்து பேச்சு மேடைக்கு தமிழ் கட்சிகளை அழைக்கிறதே ஆளும் அரசாங்கம்?

**சாய்ராகேஸ்** யாழ்ப்பாணம்

**புலிகள் இப்போது இருந்திருந்தால் எப்படி இருக்கும் வியாசரே?**

நடுச் சாமத்திலும் ஒரு பெண் எந்த இடத்திற்கும் தனிமையில் போய் வந்திருப்பாள். களவு, கொலை, கொள்ளை என்ற பேச்சுக்கே இடமிருக்காது.
போதை என்கின்ற பெயரைக் கூட கேள்விப்பட்டிருக்க மாட்டோம். வெள்ளிச்சங்கிலியுடன் விடுகாலியாகத் திரியும் இளைஞர்களை எம் சமூகம் கண்டிருக்கவே மாட்டாது. மோட்டார் சைக்கிள் சாகசங்களுக்கு இடமே இருந்திருக்காது. இவை அனைத்தையும் விட நண்பர்கள் பிறந்தநாளுக்கு நள்ளிரவு 12 மணிக்கு வீதியில் வைத்து கேக் வெட்டி போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வில்லங்கம் நடந்திருக்கவே மாட்டாது.

**லயன்சன்** வளலாய்

**இனவாத பிரச்சினைக்கு ஒரு முடிவு கிடைக்குமா வியாசரே?**

இலங்கையில் இனங்களுக்கு இடையில் பிரச்சினை எழக் காரணமானவர்கள் அரசியல் தலைவர்கள் மாத்திரமே.
இப்போதும் அவர்கள் மனம் வைத்தால் மாத்திரமே தமிழ்-சிங்கள இனங்களுக்கு இடையிலான இனவாதத் தீ அடங்கும்.
அந்தளவிற்கு அவர்கள் சிங்கள மக்களின் மனங்களில் வன்மத்தை விதைத்திருக்கிறார்கள்.
அந்த வன்மத்தைப் போக்கவல்ல சக்தி சிங்கள அரசியல் தலைவர்களிடமே உண்டு. அவர்கள் மனம் வைக்காதவரை இனங்களுக்கிடையிலான பிரச்சினை ஒரு போதும் தீராது.

**இதழினி** புலோலி

**சின்ன சின்ன ஆசைகளை சிறுகச் சிறுகச் சேர்த்து ஒப்பேற்றும் போது அது சுக்கு நூறாவது எப்படிப்பட்டது வியாசரே?**

நூறு தோல்விகள் தான் ஒரு வெற்றியைப் பெற்றுத் தருகிறது.
தோல்வியைக் கண்டு துவண்டு போய் முயற்சிக்காமல் இருந்திருந்தால் நாம் இன்று விண்வெளியில் பறந்திருக்க முடியாது.
மின் ஒளியை கண் குளிரப் பார்த்திருக்க முடியாது. மின்சாரத்தின் பயனைப் பெற்றிருக்க முடியாது.
வாகனத்தில் பறந்து திரிய முடியாது. ஏன் இருக்கும் கதிரையில் இருந்து உடுக்கும் உடுபிடவை வரை எதுவுமே இல்லாமலே இருந்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நான் குடித்துகொண்டே இருப்பேன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன்



குடிக்காதே தம்பி குடிக்காதே நீ
தம்பி தம்பி தம்பி தம்பி தம்பியோ

குடிக்காதே தம்பி குடிக்காதே நீ
குடிச்சுப்புட்டு கொடலு கெட்டு துடிக்காதே
நீ குடிச்சிருந்தா ஊருலகம் மதிக்காதே
உன் வீட்ட க்ழுத கூட மிதிக்காதே
குடிச்சிருந்தா ஊருலகம் மதிக்காதே
உன் வீட்ட கழுத கூட மிதிக்காதே

குடிக்காதே தம்பி குடிக்காதே நீ
குடிச்சுப்புட்டு கொடலு கெட்டு துடிக்காதே

நல்ல மனுஷன் சாராயத்த தொட்டதுமில்ல
அது தொட்டவன லேசுலதான் விட்டதுமில்ல
மனுஷனோட ரத்தத்ததான் அட்ட குடிக்கும் ஆனா
மனைவி மக்கள் குடும்பத்தையே பட்டை குடிக்கும்
மனைவி மக்கள் குடும்பத்தையே பட்டை குடிக்கும்

பாடுபட்டு பணத்த சேர்த்து குடியில் விடாதே
உன் புள்ளக்குட்டி எல்லாரையும் தெருவில் விடாதே
பைய பைய கரைஞ்சி போகும் சில்லறைதாம்பா
உன் பரம்பரைக்கு மிஞ்சுறது கல்லறைதாம்பா
உன் பரம்பரைக்கு மிஞ்சுறது கல்லறைதாம்பா

குடிக்காதே
தம்பி தம்பி தம்பி தம்பி தம்பியோ

குடிக்காதே தம்பி குடிக்காதே நீ
குடிச்சுப்புட்டு கொடலு கெட்டு துடிக்காதே

வெளக்கு வச்சா ஆணும் பெண்ணும் சேர்ந்து குடிக்குது
இது வசதியுள்ள பெரிய இடத்தில் நாளும் நடக்குது
பால் குடிக்க தான் கொடுக்கும் தாய்மையின் ஜாதி
அது தான் குடிச்சா என்ன ஆகும் இயற்கையின் நீதி

வார்னீஷ குடிச்சவங்க கண்ணு போச்சுங்க
சிலர் வாங்கிவிட்ட மூச்சு கூட நின்னு போச்சுங்க
விடியறப்போ விடியட்டும் நான் சங்கு ஊதுறேன்
அந்த காந்தி அண்ணா சொன்னததான் காதில் ஓதுறேன்
அந்த காந்தி அண்ணா சொன்னததான் காதில் ஓதுறேன்

குடிக்காதே
தம்பி தம்பி தம்பி தம்பி தம்பியோ

குடிக்காதே தம்பி குடிக்காதே நீ
குடிச்சுப்புட்டு கொடலு கெட்டு துடிக்காதே
குடிச்சிருந்தா ஊருலகம் மதிக்காதே
உன் வீட்ட கழுத கூட மிதிக்காதே

குடிக்காதே தம்பி குடிக்காதே நீ
குடிச்சுப்புட்டு கொடலு கெட்டு துடிக்காதே

# இலங்கையில் பொருளாதாரம் எப்போது இயல்புக்கு திரும்பும்?

இலங்கையின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டு வழமைக்கு திரும்பும் என நம்புவதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் · கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதிகரித்து சென்ற பணவீக்கமானது, தற்போது 70 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

கொழும்பு விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகியவற்றின் அடிப்படையிலேயே பணவீக்கம் குறைவடைந்து செல்வதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இதன்படி, இந்த பணவீக்கமானது எதிர்வரும் காலங்களில் மேலும் வீழ்ச்சி அடையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

கடந்த காலங்களில் நாடு எதிர்நோக்கியிருந்த நிலையை பார்க்கும்போது, அந்த நிலைமை தற்போது முழுமையாக மாற்றமடைந்து வருவதாகவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற நிலைமைக்கு அமைய, ஓரளவு ஸ்திர தன்மையை அடைந்து வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

அந்நியச் செலாவணி சந்தையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறிய அவர், தேசிய மட்டத்திலும் ரூபாவின் பெறுமதி ஸ்திரமடைந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

### மத்திய வங்கியின் அறிக்கை

2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 73.7 சதவீதமாக காணப்பட்ட பண வீக்கம், இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 70.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உணவுப் பணவீக்கம் 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 85.8 சதவீதமாக காணப்பட்ட நிலையில், அது ஒக்டோபர் மாதத்தில் 80.9 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

உணவல்லா பணவீக்கம் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 62.8 வீதமாக காணப்பட்டதுடன், அது ஒக்டோபர் மாதத்தில் 61.3 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

மாதாந்த அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றம், அதன் அண்மைய மிதமடைதல் போக்கினைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 0.28 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளது.

0.41 சதவீதமாக காணப்பட்ட உணவு வகையிலுள்ள பொருட்களின் மாதாந்த விலைகளில் வீழ்ச்சி, இதற்கு பிரதானமாகப் பங்களித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உணவு வகையினுள் மீன், அரிசி, கருவாடு மற்றும் தேங்காய் எண்ணெய் என்பவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன.

எவ்வாறிருப்பினும், மாத காலப்பகுதியில் சுகாதாரம் (மருத்துவ/மருந்தக உற்பத்திகள் கொள்வனவு அத்துடன் தனியார் மருத்துவமனைகளுக்கான/ சிகிச்சை நிலையங்களுக்கான கொடுப்பனவுகள்), ஓய்வு மற்றும் கலாசாரம் (அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் காகிதாதிகள்), தளபாடம், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுப் பராமரிப்பு, மதுபான. வகைகள் மற்றும் புகையிலை, நானாவித பொருட்கள் மற்றும்



சேவைகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக உணவல்லா வகை 2022 ஒக்டோபரில் 0.69 சதவீதம் கொண்ட மாதாந்த அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

எனினும், போக்குவரத்து (பெற்றோல் மற்றும் டீசல்), துணை வகை 2022 ஒக்டோபரில் குறைவடைந்து உணவல்லா வகையில் ஒட்டுமொத்த மாதாந்த அதிகரிப்பு பாரியளவில் மிதமடைவதற்குப் பங்களித்தது.

அதேவேளை, ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2022 செப்டெம்பரில் 36.9 சதவீதத்திலிருந்து ஒக்டோபரில் 42.2 சதவீதமாக அதிகரித்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 செப்டெம்பரில் 64.1 சதவீதத்திலிருந்து ஒக்டோபரில் 62.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 செப்டெம்பரில் 31.0 சதவீதத்திலிருந்து ஒக்டோபரில் 35.7 சதவீதமாக அதிகரித்தது.

### முன்னாள் நிதி அமைச்சரின் கருத்து

நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்காக இலகுவான வழிமுறையில் செய்ய வேண்டிய பணிகளை, மிகவும் சிரமமான வழிகளில் செய்ய முயற்சித்து வருவதாக முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிக்கின்றார்.

நாட்டை கட்டியெழுப்புகின்றமை தொடர்பில், பிபிசி தமிழ் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"நான் நினைக்கின்ற விதத்தில், நாட்டை நிச்சயமாக வழமைக்கு கொண்டு வர முடியும். இவர்கள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

நோயாளர் ஒருவரின் வயிற்றை சுத்திகரித்து, நோயாளர்களை கொலை செய்யும் வகையிலேயே இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இறுதியில் நோயாளர் உயிரிழப்பாராயின், அந்த சத்திர சிகிச்சை பலனற்றது அல்லவா?

அந்த நோயாளியை வாழ வைப்பதற்கு வேறு வழி முறைகளை எடுக்க சிலர் மனதில் நினைக்கின்ற விதத்தில், வேறு வழியில் கொண்டு செல்கின்றனர். இது நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். நீண்ட காலம் எடுக்கும். எதிர்வரும் ஜுலை, ஓகஸ்ட் மாதம் வரை மிகவும் சிரமமான பயண மொன்றை செல்ல வேண்டியுள்ளது.

அந்த காலப் பகுதிக்குள் நாட்டை அபிவிருத்தி செய்யும் வழிக்குள் செல்ல முயற்சிக்க முடியும் என நான் நினைக்கின்றேன்" என அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுநாயகனின் எழுச்சிக்கதை!

கட்டார் கால்பந்து உலகக் கோப்பையை "அதிசயமும் ஆச்சரியமும்" என்கிற இரண்டே வார்த்தைகளுக்குள் அடக்கி விடமுடியும். கட்டாருக்கு உலகக் கோப்பையை நடத்தும் வாய்ப்பு கிடைத்ததே ஆச்சரியம் தான். 30 இலட்சம் கூட மக்கள் தொகையைக் கொண்டிராத அந்த நாடு, போட்டிகளைக் காண விற்றிருக்கும் டிக்கெட்டுகளின் எண்ணிக்கை மட்டுமே 30 இலட்சத்தைத் தாண்டியிருக்கும்.

யூரோசாம்பியனான இத்தாலி இந்த உலகக் கோப்பைக்கே தகுதி பெற முடியாமற்போனது ஒரு சோக அதிசயம். போட்டியை நடத்தும் கட்டார், முதல் சுற்றிலேயே ஒரு வெற்றியைக் கூடப் பெற முடியாமல் வெளியேறியது ஒரு விநோத அதிசயம். ஜப்பானிடம் உதைபட்டு முன்னாள் சம்பியனான ஜேர்மனி முதல் சுற்றோடு வெளியேறியிருக்கிறது.

மொராக்கோவிடம் அடிபட்டு பெல்ஜியமும் குரூப் போட்டிகளோடு வெளியேறியிருக்கிறது. 3 ஆசிய நாடுகள் முதல் சுற்றைக் கடந்து ரவுண்ட் ஆஃப் 16-க்கு முன்னேறின. இப்படியாக இந்த உலகக் கோப்பை நெடுகிலுமே ஆச்சரியங்களும் அதிசயங்களும் மட்டுமே நிரம்பியிருக்கின்றன.

1986இல் மரடோனா வென்று கொடுத்த பிறகு கோப்பையை நெருங்காமலே இருக்கும் ஆர்ஜென்டீனா இந்த முறை மெஸ்ஸிக்காக வெல்ல வேண்டும் என்கிற பெரும் கனவோடு இறங்கியது. முதல் போட்டியிலேயே ஆர்ஜென்டீனாவின் கனவில் வெடி வைத்தது சவுதிஅரேபியா. 0-1 எனப் பின் தங்கிய நிலையிலிருந்து 2-1 என முன்னேறி யாரும் எதிர்பார்க்காத ரிசல்ட்டை எட்டி ஆச்சரியம் தந்தது.

ஆர்ஜென்டீனாவிற்கும் மெஸ்ஸிக்கும் இது தான் மிகப் பெரிய 'எச்சரிக்கை மணியாக இருந்திருக்கக் கூடும். அங்கிருந்து சுதாரித்துக் கொண்ட ஆர்ஜென்டீனா அடுத்தடுத்த போட்டிகளை வரிசையாக வென்று தங்களது குரூப்பில் முதலிடத்தைப் பிடித்தது.

ரவுண்ட் ஆஃப் 16 இல் அவுஸ்திரேலியாவை எளிதில் வீழ்த்தி, காலிறுதியில் நெதர்லாந்தை எதிர்கொள்ள வருகிறது. மெஸ்ஸி ஒவ்வொரு போட்டியிலும் தனது வேகத்தையும் உத்வேகத்தையும் அதிகரித்து வருகிறார். உலகக்கோப்பை போட்டிகளில் மரடோனாவின் சாதனையை முறியடித்து 9 கோல்களை எட்டியிருக்கிறார். மெஸ்ஸிக்குத் தோளோடு தோள் நிற்கும் தளபதிகளாக அல்வரஸ், டீபால், லட்டா ரோமார்ட்டினஸ், எமிலியானோ மார்ட்டினஸ் ஆகியோரும் சிறப்பாகப் பங்களித்து வருகின்றனர்.

சிறிய அணிகள் பெரிய அணிகளை வீழ்த்தியதை அதிசயம் ஆச்சரியம் என ஒரு வர்ணிப்புக்காகப் பேசினாலும், உண்மையிலேயே அந்த அணிகளின் கடின உழைப்பிற்கும் உத்வேகத்திற்கும் கிடைத்த வெற்றிகள் தான் அவை. எந்தச் சிறிய அணிக்கும் முழுமையாக சௌகரியமான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஜேர்மனியை வீழ்த்திய போட்டியில் ஜப்பான் அணி வெறும் 17% மட்டுமே பந்தைத் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தது.

இவ்வளவு குறைவான சமயத்திற்கு பந்தை வைத்திருந்து உலகக் கோப்பையில் ஒரு போட்டியை வேறெந்த அணியுமே வென்றதில்லை. சவுதி அரேபியா ஆர்ஜென்டீனாவை வீழ்த்திய சமயத்திலும் சவுதியின் பயிற்சியாளர் ஹெர்வ் ரெனார்டு வீரர்களிடம் ஆவேசமாகப் பேசிய வீடியோ ஒன்றும் வைரலானது.

'மெஸ்ஸி அட்டாக் செய்து வருகிறார். நீங்கள் ஒன்றுமே செய்யாமல் நிற்கிறீர்கள். வேண்டுமானால் அங்கேயே அவருடன் நின்று போட்டோ எடுத்துக் கொள்கிறீர்களா' என அவர் பேசியிருந்தார். சவுதிவீரர்கள் இரண்டாம் பாதியில் உயிரைக் கொடுத்து ஆடி வென்றார்கள்.

இது தான் இந்த உலகக் கோப்பையில் அத்தனை சிறிய அணிகளின் கதையாடலாகவுமே இருந்தது. தென் கொரிய வீரர் சன் ஹெங்மின் போர்த்துக்கலை வீழ்த்தி விட்டு சிந்திய கண்ணீர், உழைப்பின் அறுவடையைக் காத்திருந்து தரிசித்த பேரானந்தத்தின் வெளிப்பாடு.

எக்கச்சக்க உத்வேகக் கதைகளையுமே இந்த உலகக் கோப்பை பொதிந்து வைத்துள்ளது. கடைசியாக 2002 இல் நாக் அவுட்டுக்கு முன்னேறிய போது செனகல் அணியின் கப்டனாக இருந்தவர் சீசே. அவர் தான் இப்போது அந்த அணியின் பயிற்சியாளர்.

2002 இற்குப் பிறகு இப்போது தான் அந்த அணி நாக் அவுட்டுக்கு முன்னேறியது. ரவுண்ட் ஆஃப் 16 இல் வெளியேறினாலும், ஆபிரிக்க நாடாக இந்த அளவு சாதித்ததே ஊக்கமளிப்பது தான்.

இது வரை ஒரு முறை கூட கோப்பையை வெல்லாமல் பல முறை நாக் அவுட்டிற்கு முன்னேறியிருக்கும் நெதர்லாந்து அணியின் பயிற்சியாளர் லூயிஸ் வான்ஹால் ஒரு புற்று நோய்ப் போராளி. புரோஸ்டேட் கேன்சரால் பாதிக்கப்பட்டு அதற்கான சிகிச்சைகளை எடுத்துக் கொண்டே அணியைப் பயிற்றுவித்து வருகிறார். அதே நெதர்லாந்து அணியின் பிலிண்ட் இதய பாதிப்பு கொண்டவர். அதற்கான சிகிச்சைகளை எடுத்துக்கொண்டு அவரும் கலக்கி வருகிறார்.

'கோல்டன்பூட்' க்கான அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் இப்போது வரை பிரான்ஸின் கிலியன் எம்பாப்பே முதலிடத்தில் இருக்கிறார். இந்த உலகக் கோப்பையில் மட்டும் காலிறுதிச் சுற்றுக்கு முன்வரை 5 கோல்களை அடித்திருக்கிறார். 23 வயது இளம் வீரரான எம்பாப்பே கடந்த உலகக் கோப்பையிலேயே ஸ்டாராகப் பரிமளிக்கத் தொடங்கிவிட்டார். பிரான்ஸ் வென்றிருந்த அந்த உலகக் கோப்பையில் மட்டும் 4 கோல்கள் அடித்திருந்தார்.

இதுவரையில் உலகக் கோப்பையில் மட்டும் 11 போட்டிகளில் 9 கோல்களை அடித்திருக்கிறார். ரொனால்டோவின் எண்ணிக்கையைக் கடந்து விட்டார். மெஸ்ஸியை சமன் செய்து விடுவார்.

அதுவும் அவர்கள் ஆடியதை விட பாதிக்கும் குறைவான போட்டிகளில் எம்பாப்பே இதைச் சாதித்திருக்கிறார். அடுத்த தலைமுறையில் கோலோச்சப் போகும் இந்தப் புது நாயகனின் எழுச்சிக்கதையே, பிரான்ஸ் அணியின் பெரும்பலமாகவும் இருக்கிறது.

ஆர்ஜென்டீனாவிற்குத் தொடக்கத்தில் வழங்கப்பட்ட எச்சரிக்கை பிரேஸில், போர்த்துக்கல் போன்ற அணிகளுக்குக் கொஞ்சம் தாமதமாக வழங்கப்பட்டது.

பிரேஸிலுக்கு கேமரூனும் போர்த்துக்கலுக்கு கொரியாவும் அந்த அதிர்ச்சியை வழங்கி எச்சரித்திருக்கின்றன. பிரேஸிலும் போர்த்துக்கலும் எந்த அளவுக்கு அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறதோ அந்த அளவுக்கு முன்னேற முடியும்.

# நிலவுக்கு பயணிக்கும் நடிகர்



தொழில்முறை டிஜே, கொரியாவில் பிரபலமாகி வரும் ராப் பாடகர், விண்வெளி சார் யூட்யூபர் ஆகியோர் ஸ்பேஸ் எக்ஸ் விமானத்தில் நிலவுக் குப் பயணிக்கவுள்ளனர்.

தனியார் ஸ்பேஸ் எக்ஸ் விமானத்திற்காக ஜப்பானிய கோடீஸ்வரரால் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தொழிலதிபர் யுசாகு மெசாவா, கடந்த ஆண்டு படைப்பாளிகளுக்கான உலகளாவிய தேடலுக்குப் பிறகு தனது குழுவில் இருக்கப்போகும் கலைஞர்களை குறித்துத் தெரிவித்தார்.

அமெரிக்க டிஜே ஸ்டீவ் அயோகி, கொரிய நட்சத்திரமான டாப் என்றழைக்கப்படும் சோய் சூங்-ஹ்யூன் ஆகியோர் அதிலுள்ள முதன்மையான தேர்வுகளாக அறியப்படுகின்றனர்.

அடுத்த ஆண்டில் திட்டமிடப்பட்ட நிலவுக்குச் செல்லும் விமானம், 1972ஆம் ஆண்டுக்குப் பிறகு மனிதர்களின் முதல் சந்திர பயணமாக இருக்கலாம்.

முன்மொழியப்பட்டுள்ள இந்தப் பயணத்தில், ஒரு விண்கலம் சந்திரனை வட்டமிடுவதோடு, அதன் மேற்பரப்பிலிருந்து 200 கி.மீ தொலைவு வரை நெருங்கிச் செல்லும். அந்தப் பயணம் தொடங்கியதிலிருந்து 8 நாட்களுக்குப் பிறகு அவர்கள் திரும்புவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனும் விசாரிக்கப்படுகிறார் முருகன் ஆதங்கப்படுகிறார்...



என்ர சிவனே என்ன உன் அடியவன்
ஆறு.திருமுருகனிடம்
சிவன் யாற்ற ஆள் என்டு விசாரிச்சினமாம்...

இனி நீயும் கொஞ்சம் கவனமாயிரு
ஏனென்றால் காட்டிக் குடுக்கிற கருநாகங்கள்
நீதான் தமிழர்களின் வீரக்கடவுள்
முருகனின் அப்பன் என்றும்...

நீயும் புலி போல கழுத்தில்
நஞ்சு கட்டி வைச்சிருக்காயென்றும்...
புலியுடை தரித்த புலி என்றும் காட்டிக் குடுக்கக் கூடும்

கவனம் சிவனே! பார்த்தியா?
உனக்கே கவனம் சொல்ற
நிலைமையில் எம்மட இனமிருக்கு!

திருமூலர் சொன்ன சிவபூமியைக் காக்க
திருவுளம் கொண்டிருக்கும்
உன் பிள்ளை திருமுருகனையும்
நீதான் காக்கனும் சாமியே!

முழுசாட்சியும்
வற்றாப்பளை அம்மனிட்ட இருக்கல்லோ?
ஒருக்கா கேட்டு வேண்டி
ஒரு ருத்ர தாண்டவம் ஆடித்தான் பாரன்
எங்கள் பராபரமே...!

இல்லையென்டா எங்கட பார்வதி அம்மான்ட
மகனை மீண்டும் வரப்பண்ணு
அவன் ஆடுவான் அக்னி தாண்டவம்
பொசுங்கிப் போவர் இந்த மண் தின்னிகள்.

எஸ்.கவிதரன்

## உனக்கு யார் தந்தார் உரிமை?

எந்தப் பிரச்சினைக்கும்
தற்கொலை தீர்வல்ல...
படைத்தவனுக்கு தெரியும்
எம்மை தன்னிடம் எப்போது
எடுத்துக் கொள்ள வேண்டும் என்று...
அவன் தந்த உயிரை நீ தொலைப்பதற்கு
உனக்கு யார் தந்தார் உரிமை?

தாங்கிக் கொண்ட தந்தையின் தோளையும்
தலைசாய்க்க இடம் தந்த தாயின் மடியையும்
ஒரு நிமிடம் கண்மூடி சிந்தித்தால்
இவ்வாறான முடிவுகள் தேவையில்லை...

நீ என்ன கோழையா? முடிந்தவரை போராடு
பாரதியார் கூறியது போல்
"இங்கு யாரும் யாருக்கும்
சளைத்தவர்கள் அல்லர்!!!"

புஸ்பாகரன் பிரமியா

## தாய்மை



தன்னையுருக்கி தாய்மைப் பெருக்கி
உன்னை என்னை உலகில் உயர வைத்து
மண்ணை நேசிக்க மறமூட்டியவள்-தாய்

கண்ணைப் போலக் காத்து கருணைதனையூட்டி
விண்ணைப் போல பரந்து தியாக மனம் கொண்டு
உண்மை அன்பால் அரவணைப்பவள்-தாய்

துள்ளித்திரியும் வயதில் துணை நின்று
பள்ளிப் படிப்பில் பக்குவம் சொல்லித் தந்து
உண்ணாமல் உறங்காமல் உயிர் தந்து
உள்ளத்தால் உறவாடி மகிழும் உத்தமி - தாய்

வறுமை தெரியா பலதும் பத்தும் ஈர்ந்து
பணம் சேர்த்து படிக்க வைத்து மேதையாக்கி
வளமாய் வாழ வழிகாட்டுபவள்-தாய்

க.நாகேஸ்வரா-சண்டிலிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 587



## இதுவே மருந்து

'டாக்டர், என் தாத்தா மணியகாரனாக
இருந்த காலத்தில்...'
காலத்தை மதிக்காமல், மற்றவர்
வேலையை
உணராமல் அறுவை அறுக்கும்
இவருக்கு
இதுவே மருந்து

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 588



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## நாவை அடக்குவோம்

ஏய் மனிதா!
அன்று கௌதம புத்த பிரான் உனக்குப்
போதித்தான் மனித வாழ்வில் துன்பங்களுக்கு எல்லாம்
வழிகோலும் ஆசை கொண்ட
நாவை நீ அடக்கு என்று
அந்த நாவையே இவர்களைப் போல நாமும்
அடக்கினால் என்றும் மண்ணில்
நாம் சுகமாய் வாழலாம்

சுப்பிரமணியம் ஜெயரூபன்,பருத்தித்துறை

## பாசமும் பாலமும்

மூன்றில் இரண்டு
குன்றிப் போனதால்
ஐந்தில் மூன்று வர
வழி பிறந்தது
காற்று உள்ள போது
தூற்றுவது போன்று
நாட்டுப் பற்றையும்
தேட்டத் திட்டத்தையும்
நாளும் காட்டிக் காட்டி
வாட்டும் வாய்ப்பூட்டு
தொங்குபாலம்
தாங்குமா பாரம்

க.நாகராசா,
புனாவில்.

## வாய் பூட்டு

அதிகார வர்க்கத்தின் அநியாயம்
அறியாமை செய்கின்ற அகங்காரம்
உண்பதற்கும் உணவு இல்லை
உரிமை கோசங்கள் அடக்கம்
ஊடக சுதந்திரம் பறிப்பு
உண்மைகள் என்றும் அழிவதில்லை
ஊமைகள் போல் வாழ்வு
மனித இனத்திற்கே அது சாவு

கும்பவாழியான்
உடுப்பிட்டி.

## அதிகாரத்தால்...

வாழத் தெரியாதோர்
வாழும் நாட்டில்
ஆளத் தெரியாதோர்
ஆட்சி புரிவதாய்
அவலப்படுகிறது மானுடச்
சுதந்திரத்தை அழித்து
அதிகாரத்தால்
ஆள நினைப்பதெல்லாம்
அதிக காலமில்லை.

வைகதன்,
கொக்குவில்.

## தொ(து)ட்டு வைத்தியர்

தொற்றில் சிக்கி படுத்திருக்க
துட்டும் இன்றி தவித்திருக்க
இறப்பைத் தள்ளிப் போடுகின்றேன்
தொடுவதற்கே துட்டு என்றார் வைத்தியர்

பிரகவி,
கொக்குவில்.

## கொள்ளிவாய்ப் பேய்

ஏதும் இலாது எவரையும் குறை சொல்லும் வாயை
காதும் மூக்கும் வைத்து கதை கட்டும் வாயை
சாதுவான மாதர் மனதில் சஞ்சலம் மூட்டும் வாயை
தோது சொல்லி குடும்பங்களை சிதைக்கும் வாயை
மோது; மூடு; குறை; சிதை; பூட்டு.

பி.யதுர்சன்,
தொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பாகம்



சாண்டில்யன்

# கடல் புறா

## குறுக்கே புகுந்த குறுவாள்

காலத்தின் பதிவு 45

அத்தகைய ஒரு பூர்வபீடிகை அவ்விதக் கைகலப்பில் முடிவது வருடாந்திரப் பழக்கமாதலால் அத்தகைய நிகழ்ச்சிகளையே எதிர்பார்த்த பலவர்மன் நிகழ்ச்சியில் புரட்சி ஏற்பட்டு விட்டதைக் கண்டு பிரமிப்பின் எல்லையை எய்தினான்.

திடீரெனக் குழப்பத் தீ மூண்டு பரவி மனித உயிர்கள் பலவற்றைக் கொள்ளை கொண்டுவிடும் என்று எதிர்பார்த்த பலவர்மன், அந்தத் தீ ஆரம்பத்திலேயே அணைக்கப்பட்டதையும் இளையபல்லவனின் நிதானமும் அதிகாரப் பார்வையும் அந்தக் கூட்டம் முழுமையையும் அடக்கியதன்றி அந்த நால்வரைக்கூடத் திகைக்க வைத்ததையும் கண்டு 'இவன் சாதாரண மனிதனல்ல. இவனிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்' என்று எண்ணினான்.

கொள்ளைக்காரரை இளையபல்லவன் ஏற்கனவே மித்ரபேதம் செய்து வைத்திருந்ததைப் பற்றியோ அவன் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கியதைப் பற்றியோ ஏதுமறியாத பலவர்மன், கொள்ளைக்காரர் மட்டுமின்றி அவர்கள் மாதர்களும் இளைய பல்லவன் பக்கத்தில் சாய்ந்து அவன் சொன்னபடி கேட்டதைக் கண்டு அதற்குக் காரணம் தெரியாமல் குழப்பத்துக்கே உள்ளானான்.

அவன் வில்வலனையும் சொல்லால் மடக்கித் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு நடனத்தை மேற்கொண்டு நடத்த உத்தரவிட்ட போது தான் இருப்பது கனவுலகமா நனவுலகமா என்ற சந்தேகம் கூட ஏற்பட்டது பலவர்மனுக்கு. அத்தனை சந்தேகத்திலும் குழப்பத்திலும் வியப்பிலும் ஓர் உண்மையைத் திட்டமாகத் தெரிந்து கொண்டான் அக்ஷ்யமுனைக் கோட்டைத் தலைவன். இளைய பல்லவன் பெரும் கூட்டங்களை அடக்கி ஆளப் பிறந்தவன் என்ற உண்மை தான் அது.

இளையபல்லவன் அருகில் வில்வலன் அமர்ந்ததுமே கூட்டத்தில் மீண்டும் அமைதி நிலவியது. அந்த நால்வரின் குறைகள் யாதாயிருந்தாலும் அச்சம் அந்தக் குறைகளில் ஒன்றாயிருக்க முடியாது என்ற முடிவுக்கு முன்னதாகவே இளையபல்லவன் வந்துவிட்டான். சுமார் ஐம்பது வீரர்களை மட்டும் துணை கொண்டு குழப்பமும் கொலையும் விளையும் அந்தப் பெரும் கூட்டத்திடை வந்து நின்ற நால்வர் அற்பசொற்பமானவர்களல்லவென்பதை இளையபல்லவன் புரிந்து கொண்டான்.

அந்த ஐம்பது பேரே கொள்ளையரின் பெரும் கூட்டத்துக்கு ஓரளவு அச்சத்தை விளைவித்திருக்கிறார்களென்பதையும் அங்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட சலசலப்பால் உணர்ந்துகொண்ட இளைய பல்லவன், போரிடுவதில் அவர்கள் திறமை அற்பமாயிருக்க முடியாதென்றும் முடிவு செய்தான்.

பூர்வகுடிகளின் திடகாத்திரமும் வேல்களையும் வாள்களையும் அவர்கள் தாங்கி நின்ற முறையும் 'ஒவ்வொரு வீரனும் குறைந்தபட்சம் பத்துப் பேரையாவது வீழ்த்தும் ஆற்றலுள்ளவன்' என்பதற்கு அத்தாட்சிகளாக விளங்கின.

சாதாரண வீரர்களே அப்படியிருந்தால் தலைவர்களின் வீரம் அளவிட முடியாததாயிருக்க வேண்டுமென்று தீர்மானத்துக்கு வந்த இளைய பல்லவன், வில்வலன் தன் முதுகுப் புறத்தில் குறுவாளெறிந்ததற்குக் காரணம் கோழைத்தனமல்லவென்பதையும் பழைய பழக்கத்தின் தோஷமேயென்பதையும் அறிந்தான்.

ஆகவே வீரனாயிருப்பவனை அவன் வீரத்தை எள்ளி நகையாடியே அடக்க வேண்டுமென்ற தீர்மானத்தால் அத்தனை சாமர்த்தியமாகப் பேசித் தன் வலையில் வில்வலனைச் சிக்க வைத்துப் பக்கத்திலும் அமர்த்திக் கொண்டான் இளைய பல்லவன். பக்கத்தில் உட்கார்ந்த வில்வலனும் தன் சகாக்கள் மூவரையும் ஏதும் செய்ய வேண்டாமெனக் கண் மூலமே எச்சரித்துவிட்டு, ஏதும் நடக்காதது போல் நடனத்தைக் கவனிக்க ஆரம்பித்தான். இளையபல்லவன் கட்டளையிடவே அதுவரை சித்திர பாவையென நடனமேடையில் நின்றிருந்த மஞ்சளழகி மீண்டும் நடனத்தை துவக்கினாள்.

(தொடரும்...)

# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு-பகுதி2

வியட்நாமிய ஆதிகுடி மக்களிடையே உலவும் நாட்டுப்புறக்கதை ஒன்றின்படி கடவுள் தன்னுடைய படைப்பிலேயே மிக அழகான இடமொன்றை உருவாக்கவதற்காக ஒரு கடல்நாகத்தை அனுப்பினார். அது கண்ணைப் பறிக்கும் ஆபரணங்களையும் பச்சை மாணிக்கக் கற்களையும் தன் வாயிலிருந்து வியட்நாம் தேசத்தின் வடக்குப் பகுதியில் துப்பியது. அதன் உமிழ்நீர் கடலும் பசும்புல்வெளிகள் நிறைந்த தீவுகளுமாக மாறி ஹலாங் விரிகுடா பிரதேசமாகக் காட்சியளிக்கிறது என்பதான ஒரு நம்பிக்கை அங்கிருக்கிறது.

சுமார் 579 சதுர மைல்கள் பரப்பளவு உள்ள ஹலாங் பிரதேசத்தில் 46 சதுர மைல்கள் மட்டுமே கடல் நீர் பரவியவை. கிட்டத்தட்ட 1960 சிறிய மற்றும் பெரிய தீவுகள் அங்கே உள்ளன. ஒரு சில குட்டித் தீவுகள் நீரில் மிதக்கும் அளவு சிறியவை. வியட்நாமின் கணக்குப்படி 2000 பழங்குடிகள் அந்தத் தீவுகளில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கடற்கரையை ஒட்டி அதன் வனப்பில் மயங்கி வெளியிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் 13 ஆயிரம் பேர்.

200இற்கும் மேற்பட்ட மீன் வகைகள் வேறு இடங்களில் அதிகம் காணப்படாத 60இற்கும் மேற்பட்ட விலங்குகள் 450 வகையான மெல்லுடலிகள் சில அபூர்வமான வகைகளைச் சார்ந்த மலரினங்கள், தாவரங்கள், கடல் வாழ் உயிரினங் கள் ஆகியன ஹலாங்கில் காணக் கிடைக்கின்றன. இங்குள்ள பழங்குடியினரின் பிரதான தொழில் மீன்பிடிப்பது. தற்பொழுது சுற்றுலாத்தொழில் வேகவேமாக பரவி வருகிறது.

இங்குள்ள சில விலங்குகள், தாவரங்களின் பாசில்களை ஆய்வு செய்தவர்கள் 10 ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய தீவுகள் இவை என யூகிக்கிறார்கள். வேறெங்கும் அதிகம் காணப்படாத சுண்ணாம்புப் பாறைகள் 500 மில்லியன் வருடங்களுக்கு முன் உருவானவை என கணிக்கிறார்கள். இங்கு கேட் பா தீவு, டாவ் பீ தீவு, டாவ் கோ தீவு, தீவு என்பது போன்ற சுண்ணாம்புத் தீவுகள் பல காணப்படுகின்றன.

இத்தீவுகளில் டாவ் கோ தீவு பகுதியில் சுண்ணக்கல் விழுதுகள், சுண்ணக்கல் புற்றுகள் கொண்ட 20 மீற்றர் உயரத்துக்கும் அதிகமான அழகிய நிறங்களுடைய குகைகள் பல இருக்கின்றன. இந்த விரிகுடாப் பகுதியில் மிதக்கும் கிராமங்கள் பல இருக்கின்றன. எனவே புவியியல் ஆய்வாளர்களுக்கும் மானுடவியல் தாவர மற்றும் விலங்கியல் ஆய்வாளர்களுக்கும் வரலாற்றுத்துறை நிபுணர்களுக்கும் இது வற்றாத பொக்கிஷமாகவே இருக்கிறது.



*1994 ஆம் வருடம் ஹலாங் விரிகுடா யுனெஸ்கோ அமைப்பினரால், உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

இங்குள்ள தீவுகளில் சில வானிலிருந்து பார்க்கும்போது வித்தியாசமான உருவ அமைப்பிலும் சில நமக்கு பழக்கமான உருவ அமைப்பிலும் காணப்படுகின்றன. கா சோய் என்னும் தீவு சேவல் ஒன்று சண்டையிடுவது போன்ற தோற்றத்தில் காட்சியளிக்கின்றது. அதுபோல வோயி தீவு யானை வடிவத்திலும் மாயி நா தீவு ஒரு கூரையின் வடிவத்திலும் காட்சியளிப்பது பிரமிப்பூட்டுவதாக இருக்கின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

320

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## குளிக்கப் போய் சேறு பூசி

மனிதன் ஒவ்வொருவரும் தனித்துவமானவன். அவனின் ஆற்றலும் ஆளுமையும் கூட தனித்துவமானவைதான். ஒவ்வொரு மனிதனுள்ளேயும் அவனுக்கே உரித்தான பல திறமைகள் புதைந்திருக்கின்றன. ஒருவன் போன்று இன்னொருவன் இருக்க வேணடும் என்ற அவசியமில்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது.

எமது பழைய பதிவுகளை புரட்டிப் பார்ப்போமாக இருந்தால் பாரதியார் போன்று திருவள்ளுவர் இல்லை. அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி போன்று ஆறுமுக நாவலர் இல்லை. தியாகி பொன் சிவகுமாரன் போன்று தந்தை செல்வா இல்லை.

நடிகர் விவேக் போன்று வடிவேலு இல்லை. இவர்கள் ஒவ்வொருவருமே ஆற்றலும் அர்ப்பணிப்பும் உள்ளவர்கள் தான் ஆனால் ஒருவர் போல் மற்றவர்கள் மாறுவதற்கு முயற்சி செய்யவில்லை. ஒவ்வொருவருமே தமது பாணியில் பயணித்து மக்களின் மனதில் இடம்பிடித்திருக்கிறார்கள்.

துர்அதிஷ்டவசமாக நாம் எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் வழிநடத்த அல்லது நல்வழிப்படுத்த முயலும்பொழுது இன்னொருவருடன் ஒப்பிட்டு பேசும் பழக்கத்தை வளர்த்து வைத்திருக்கின்றோம். இது ஒரு வேதனையான உண்மை.

"அவனைப்பார் 4 மணிக்கு எழும்பிப் படிக்கின்றான் ஆனால் நீ...", "அவனுடைய எழுத்தைப் பார் உன்னுடைய எழுத்தையும் பார்...", "அவன் எழும்பி எவ்வளவு உசாராய் கதைக்கின்றான் அவனை பார்த்துப் பழகு...", "அந்தக் காலத்திலே நான் என்ன மாதிரி எல்லாம் செய்தனான் ஆனால் நீ..."

இவ்வாறாக ஒருவனைப் போல இன்னொருவனை படம் போட்டு மாற்றுவதற்கு கடுமையாக முனைந்து நிற்கின்றோம். எதற்கு எடுத்தாலும் ஒப்பிட்டு கதைப்பதை அன்றாட நடவடிக்கையாகக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவனிற்கான அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அவன் சார்ந்த அவனது நிறைகுறைகள் சார்ந்ததாக அவனது சுபாவம் சார்ந்ததாக இருக்க வேண்டுமே அன்றி ஒப்பிடும் பொறிமுறையாக இருக்க முடியாது.

ஒப்பிட்டு அறிவுரை சொல்ல முயல்வது அவர்களை காயப்படுத்தி பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுடன் குளிக்கப் போய் சேறு பூசிய கதைபோல அல்லது பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிய கதை போல் ஆகிவிடுவதுடன் அது அவர்களின் பல சுகாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும்.

ஒப்பிட்டு பேசுவதால் ஏற்படும் தீயவிளைவுகளை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமானவை மனக்குழப்பம், விரக்தி, பொறாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு, கற்றல் செயற்பாடுகளில் ஆர்வக்குறைவு போன்றவையாகும். சகோதரர்களிடையே பொறாமை உணர்வு வளர்வதற்கும் இது காரணமாகிவிடுகின்றது.

பிள்ளைகளை வழிநடத்தும் போது எமது முக்கியமான இலக்கு எதுவாக இருக்கவேண்டும் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும். இந்த இலக்கு பரீட்சைகளில் சித்திபெறுவதா? உயர்கல்வி கற்பதா?, போட்டிகளில் வெற்றி பெறுவதா?, செல்வம் சேர்ப்பதா?, அல்லது நல்ல மனம் கொண்ட மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக உருவாக்குவதா ? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு ஒப்பிட்டு பேசப்படும் பேச்சு உதவியாக அமையாது.

சுயமாக ஒருவன் சிந்தித்து வாழ்வில் உயர்ச்சி அடைவதற்கு அவனில் உள்ள திறமைகள் அடையாளப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அந்தத் திசையிலே அவனை முன்னேறுவதற்கு அவன் சார்ந்த அறிவுரைகளும் வழிகாட்டல்களும் உதவியாக இருக்கும். ஆனால் இது ஒரு பொழுதும் ஒப்பிட்டுப் பேசும் பேச்சாக அமைந்துவிடக்கூடாது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## எமது பாரம்பரிய நடைமுறைகள் மெருகேற்றப்பட...



எமது கலாசாரங்களும் பண்பாடுகளும் காலத்திற்கு காலம் மெருகேற்றப்பட்டு மேலைத்தேய நாடுகளால் கூட மதிக்கப்படுகின்ற ஒரு உன்னத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இது மனிதனின் உடல், உள ஆரோக்கியத்திற்குக் கூட உறுதுணையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இருந்த பொழுதும் எமது சில பாரம்பரிய நடைமுறைகள் எமது மக்களின் மனநிலையிலும் உள ஆரோக்கியத்திலும் பாரதூரமான தீயதாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதுடன் பெண்களின் சமத்துவ உரிமைகளையும் பாதித்து நிற்கின்றது.

உதாரணமாக ஒருவரின் மரணச்சடங்கின் பொழுது பாரிய மன வேதனையில் இருக்கும் அவரின் மனைவியை அவரின் உடலை சுற்றிவரச் செய்து தாலிக் கொடியை கழற்றி போடச் சொல்லும் ஒரு சம்பிரதாயமும் பொட்டு, பூ என்பவற்றை அகற்றச் சொல்லும் ஒரு சம்பிரதாயமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இது வேதனையில் துவண்டிருக்கும் அந்தப் பெண்ணுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பெரும் மனத்தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. மனைவியின் இழப்பின் பொழுது கணவன் அனுபவிக்காத பல இடர்பாடுகளை கணவனின் இழப்பின் பொழுது மனைவி எதிர்கொள்ளும் ஒரு துர்ப்பாக்கிய நிலை இருந்து வருகிறது. ஒரு மனிதனின் இறப்பின் பொழுது அந்த துயரத்திலிருந்து அந்தக் குடும்பத்தினர் மீள்வதற்கான சில புதிய பாரம்பரிய முறைகளை நாம் மெருகேற்றிக் கொள்ள முடியும். ஆனால் மரணச் சடங்கின் பொழுது பெருந்துயருற்றிருக்கும் மனைவியை தாலியை கழற்றி இறந்தவரின் உடல் மீது போடுமாறு கேட்டுக் கொள்வதோ அல்லது அங்கே வைத்து பூவையோ பொட்டையோ அகற்றுமாறு கேட்டுக் கொள்வதோ மனிதத்துவப் பண்பு ஆகாது. இது பல உளவியல் தாக்கங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

சமய, சமூக பெரியவர்கள் எமது இந்த நடைமுறைகளை தவிர்த்துக் கொள்வதற்கு தமது பெரும்பங்களிப்பை ஆற்ற முடியும். காலத்திற்கு ஏற்றாற் போல் எமது பாரம்பரிய நடைமுறைகள் மெருகேற்றப்படுவது அன்று தொட்டு நடைபெற்று வருகிறது. எனவே இவ்வாறான நடைமுறை மாற்றங்கள் ஒரு தவறான காரியம் என்று கொள்ளப்பட மாட்டாது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் நம்பர் வன் பணக்காரர் இடத்தை இழந்த எலான் மஸ்க்

(வோஷிங்டன்)

உலகின் நம்பர் வன் பணக்காரர் இடத்தை எலான் மஸ்க் இழந்துள்ளார். டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளரான அவர் சமீபத்தில் டுவிட்டர் நிறுவனத்தை ரூ.3 ½ இலட்சம் கோடி விலைக்கு வாங்கினார்.



இதையடுத்து அவர் டெஸ்லா நிறுவனத்தின் ரூ.32 ஆயிரம் கோடி மதிப்புள்ள பங்குகளை விற்றார். இதற்கிடையே டுவிட்டர் நிறுவனத்தில் ரூ.3½ இலட்சம் கோடி முதலீடு செய்ததாலும் டெஸ்லா நிறுவனத்தின் பங்குகள் சரிந்ததாலும் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு குறைந்தது. இதையடுத்து எலான் மஸ்க்கை முந்தி பிரான்ஸ் தொழில் அதிபர் பெர்னார்ட் அர்னால்ட் உலகின் நம்பர் வன் பணக்காரர் என்ற இடத்தை பிடித்தார்.

போர்ப்ஸ் பட்டியலில் பெர்னார்ட் அர்னால்ட் ரூ.15.29 இலட்சம் கோடி சொத்துடன் முதலிடத்தில் உள்ளார்.

இதனால் எலான் மஸ்க்கின் நிறுவனங்களின் பங்கு சற்று உயர்ந்தாலும் அவர் மீண்டும் முதலிடத்தை பிடிக்க அதிக வாய்ப்பு உள்ளது.

டெஸ்லாவின் பங்குதாரர்கள் கூறும் போது, "டுவிட்டரில் எலான் மஸ்க் அதிக கவனம் செலுத்தியதே டெஸ்லாவின் பங்கு குறைய காரணமாக இருந்தது" என்றார்.

டுவிட்டர் நிறுவனத்தை விலைக்கு வாங்கிய எலான் மஸ்க் அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். சுமார் 4 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## வேலணை பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத கட்டாக்காலி நாம்பன் கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம் :- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம் :- 12.12.2022 திங்கட்கிழமை மு.ப 11.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச்செல்லல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு:-**
**021 221 1505**
**11.12.2022**

**நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி**
**தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**வேலணை.**

(C-5468)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: சூரி. செவ் 6 இல்
உயரம்:5' 9"
தகைமை/தொழில்: Civil Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/10408

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா:28 ¾ சூரி 2 செவ் 3 இல்
உயரம் :5' 6"
தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
உள்நாடு மட்டும்
தொ.இ: B/10409

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா:39 ¾ சூரி 5 செவ் 9 இல்
உயரம்: 6' 1"
தகைமை/தொழில்: பட்டதாரி வியாபாரம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/10415

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: சூரி. செவ் 6 இல்
உயரம்:6' 1"
தகைமை/தொழில்:பட்டதாரி முகாமையாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10416

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: சூரி 3 செவ் 5 இல்
உயரம்: 163 cm
தகைமை/தொழில்: வைத்தியர் இறுதி ஆண்டு
எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்
தொ.இ: G/11498

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா:67 சூரி 12 செவ் 1 இல்
உயரம்: 150 cm
தகைமை/தொழில் :ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/11503

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 44 சூரி 6 செவ் 8 இல்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: BA ஆசிரியர் (தனியார்)
எதிர்பார்ப்பு: பொறியியலாளர் கணக்காளர்
தொ.இ: G/11512

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 24 சூரி , செவ் 9 இல்
உயரம்:5' 4"
தகைமை/தொழில்: தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்(கனடா,லண்டன்)
தொ.இ: G/11516

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு**
**சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

## 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையானது 2023 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்ட வழங்குபொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 31.12.2022 ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொகுதிகள்

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை
தொகுதி "C" - வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொ.இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A - 01 | அனைத்து காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A - 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டிட இரும்புப்பொருட்கள், தீந்தைகள் வாணிஸ் மற்றும் இரும்பு பொருட்கள் |
| A - 07 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்ப்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09. | அழுக்கு நீக்கும் பவுடர்கள், திரவங்கள் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரீயூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப்பொருட்கள், தொழிலாளர்களுக்கான நீளச்சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மண்வகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | பாதணிகள், தோல்ப்பொருட்கள் |
| A - 19 | அலங்காரப்பொருட்கள் |
| A - 20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொ.இல | சேவைகள் / வேலை |
|---|---|
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B - 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( காற்று குளிராக்கி, தொலைநகல், நிழற்பட பிரதி இயந்திரம், கணனி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B - 04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளமுறுக்குதலும் |
| B - 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், அச்சிடுதல், பெயர்ப்பலகை, பனர்கள் ஞாபகார்த்த பலகை தயாரித்தல் ஏனையவை |
| B - 06 | கட்டிட அமைப்பும் திருத்தவேலைகளும் |
| B - 07 | உள்ளகத் தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதி வழங்கல் மற்றும் பராமரிப்பும் |
| B - 08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B - 09 | கோலவுடை தைத்தல் |
| B - 10 | இறப்பர் முத்திரை வகைகளைத் தயாரித்து வழங்கல் |
| B - 11 | சுத்திகரிப்புச் சேவையும் பாதுகாப்புச் சேவையும் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல் |

| தொ.இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலைகள் |
| C - 02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| C - 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

### நியந்தனைகள்


1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு தொகுதிக்குமாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்களுக்காக மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 (காசாக) வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரியில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை) பணத்தினை நேரடியாகச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி பற்றுச்சீட்டுடன் அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பங்களை அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2023** எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ்.வீதி, மானிப்பாய் என்ற முகவரிக்கு 31.12.2022 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. வழங்கல் / சேவைகள் 2023 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
4. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களில் திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகளை நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 225 6650 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(C-5469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் புயலால் 50 குடும்பங்கள் பாதிப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மண்டோஸ் புயலின் தாக்கம் காரணமாக 50 குடும்பங்களைச் சேர்ந்த 184 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு மண்டோஸ் புயலின் தாக்கத்தால் மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு, மடு ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

மீன்பிடி வலைகள் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போய் உள்ளன.

இதன் காரணமாக மன்னார் மாவட்டத்தில் 50 குடும்பங்களைச் சார்ந்த 184 நபர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகி உள்ளனர். 10 மீன்பிடி வலைகள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு உள்ளன. 7 படகுகள் சேதமடைந்துள்ளன. பல ஏக்கர் விவசாய செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (4-285)

# கால்நடைகளின் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மண்டோஸ் புயலின் தாக்கத்தைத் தொடர்ந்து கால்நடைகள் இறந்து வருகின்றன. நேற்றைய தினமும் கால் நடைகள் உயிருக்காக போராடி இறந்தன.

இந்நிலையில் முட்கொம்பன் பிரதேசத்தில் இறந்து காணப்படும் கால்நடைகளின் மாதிரிகளை கிளிநொச்சி மாவட்ட விலங்கு புலனாய்வு திணைக்களத்தினர் ஆய்வுக்காக எடுத்துள்ளனர். குறித்த மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக பேராதனைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.(4-316)

# மதுபோதைக்கு அடிமையான மகனை பொலிஸில் ஒப்படைத்த தந்தை

(தருமபுரம்)

விசுவமடு பகுதியைச் சேர்ந்த தந்தை ஒருவர் தனது மகன் தொடர்ச்சியாக மதுவை பயன்படுத்தி மது போதைக்கு அடிமையான நிலையில் அவரை திருத்தித் தருமாறு கோரி, தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.


தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறுவனின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு சிறுவனுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை தான் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.(4-316)

## மரம் முறிந்ததால் மின் துண்டிப்பு

# மின்சாரம் இன்றி அந்தரிக்கும் விசுவமடு நாச்சிக்குடா மக்கள்

(தருமபுரம்)

**முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட விசுவமடு நாச்சிக்குடா பகுதியில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இன்று வரையில் மின்சாரம் இன்றி தாம் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**




அவர்கள் மேலும் தெரிவிக்கையில் கடந்த வியாழக் கிழமை காற்றின் காரணமாக மின் வயரில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததன் காரணமாகவே மின் வயரில் பாதிப்பு ஏற்பட்டது.

மின்சாரம் இல்லாமையால் தமது வர்த்தக நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த குளிரூட்டிகளில் இருந்த பல பெறுமதியான பொருட்கள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அத்துடன் மின்சாரம் இன்மை காரணமாக கிணற்றிலிருந்து நீரைப் பெற்று நாளாந்த தேவையினை பூர்த்தி செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் எதிர்வரும் 18 ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்ற வுள்ள பல மாணவர்களும் தமது கற்றல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியாமல் மூன்று நாட்களாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மின்சார சபையினர் உடனடியாக தமது பகுதியில் மின்சாரத்தினை மீள வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (4-316)

# மன்னாரில் விபத்து இருவர் காயம்



(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் வீதி ஓரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் வீதியோர தடுப்பு கல்லில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

தள்ளாடி பகுதியில் இருந்து மன்னார் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண் மற்றும் பெண் ஆகிய இருவரும் விபத்தில் சிக்கி பலத்த காயங்களுடன் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் நகர போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-285)

# கிளிநொச்சி முக்கொம்பன் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் கிராமத்தில் சட்ட விரோத மது உற்பத்தியினை கட்டுப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளருக்கு கிராமிய மது போதைப்பொருள் வலயம் மனு ஒன்றைக் கையளித்துள்ளது.

கிராமத்தில் சட்டவிரோத மது உற்பத்தி காரணமாக குடும்ப, சமூக வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள போதிலும் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் பொலிஸார் மந்த கதியில் செயற்படுகின்றனர்.

இதன் காரணமாக முக்கொம்பன் கிராமத்தில் பெண்களும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலைமை தொடர்பாக பல்வேறு தரப்பினர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்ட போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் முக்கொம்பன் கிராமத்தில் சட்டவிரோத மது உற்பத்தியினை கட்டுப்படுத்துவதற்கு மாவட்டச் செயலாளராகிய தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம் என அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-350)

# 40 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது

(தருமபுரம்)

இராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, நேற்று சனிக்கிழமை இராமநாதபுரத்தில் விற்பனை செய்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யாதிருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
~ அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வடக்கு மாகாண மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் ஆளுநர் ஜீவன் தியாகராஜா

வெப்பநிலை குறைந்து குளிரான நிலை காணப்படுவதால் வடக்கு மாகாண மக்களை அவதானமாக செயற்படுமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் ஏன் என்றால் தற்போது வெப்பநிலை குறைவடைந்து காணப்படுகின்றது. இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இந்த காலமானது குளீர் காலம் தற்பொழுது காலநிலை மாற்றத்தின் காரணமாக எமது நாட்டிலும் குளிர் அதிக அளவில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெப்பநிலை 18 செல்சியஸ் ஆக குறைவடைந்து சென்றுள்ளதனால் பல மாடுகள் உயிரிழுந்துள்ளன இந்த காலத்தில் மக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டும்.

குறிப்பாக இந்த கால நிலை மாற்றத்துடன் வளி மண்டலம் மாசடைந்த நிலைமை காணப்படுகின்றது. கடந்த சில தினங்கள் சற்று அபாய நிலையினை அடைந்து நேற்று முன்தினம் குறைந்திருந்தது நேற்று மீண்டும் அதிகரித்துள்ள நிலை காணப்புடுகின்றது.

எனினும் இது டிசம்பர் மாதம் என்பதால் மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்.

குறிப்பாக இந்த காலத்தில் வெளியில் செல்வோர் கூடுதல் கவனம் எடுத்தல் நல்லது பெரியோர்கள் சிறுவர்கள் கட்டாயமாக முகக் கவசம் அணிந்து செல்வது மிகவும் நல்லது. இதய நோய் உள்ளவர்களும் இந்த விடயத்தில் அவதானமாக செயற்பட வேண்டும் என தெரிவித்தார். (4,7,104)

## 61 பரப்பில் நெல் விதைத்ததால் இலவச உரத்தை இழந்த விவசாயி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் 61 பரப்பில் நெல் விதைத்தார்.

தனது வீட்டில் சேகரித்து வைத்த குப்பை கூழங்களை கூட்டெருவாக்கி அதனை உழவு இயந்திரத்தில் ஏற்றி வயலுக்கு இட்டார்.

வரம்பு கட்டி நல் விதை எடுத்து நாள் பார்த்து விதைத்தார்.

அவரது கஷ்ட காலம் போலும் மறுநாளே சோ என்று கொட்டியது மழை. வயல் வெள்ளத்தில் மூழ்கியது.

மகாகவி உருத்திரமூர்த்தியின் மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பதை அந்த விவசாயி படித்திருப்பார் போலும்.

மண்வெட்டியை எடுத்து தோளில் வைத்தபடி வயலுக்குச் சென்றார். வரம்பு கட்டாமல் நெல் விதைக்கும் அந்த ஊர்க் கலாசாரத்தில் அவர் வரம்பு கட்டியது தவறான செயலாயிற்று.

கட்டிய வரம்பில் வெட்டுவாய் வைத்து வெள்ளம் வழிந்தோட வழி செய்தார்.

எனினும் வெள்ளம் ஓட மறுக்கிறது. காரணத்தை அறிய வெள்ளம் ஓடுகின்ற வழி நீளம் சென்றார். அந்தோ! புதிதாக போடப்பட்ட காபற் வீதி உயரமாக அமைந்ததால் தண்ணீர் ஓடுவதில் சிரமம் என்பதை அறிந்து கொண்டார்.

என்ன செய்ய முடியும். அது பெரிய இடத்து சமாச்சாரம். அவரோ ஒரு சாதாரண விவசாயி. கடவுளை மன்றாடுவதைத் தவிர அவருக்கு வேறு வழி தெரியவில்லை.

இரண்டு மூன்று நாட்கள் கடந்து வெள்ளம் மெல்ல மெல்ல வழிந்தோடியது. வயலில் தப்பிய விதைகள் தீாம் உயிரோடு இருக்கின்ற செய்தியைச் சொல்வதுபோல முளை கட்டி வெளிப்பட்டன.

இன்றைய நம் உறவுகள் போல அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிப்பட்ட முளைகள் அந்த விவசாயியை ஆற்றுப்படுத்தின.

மானிய விலையில் கிடைத்த யூரியாவை பிரசவத்துப் பத்தியம்போல பக்குவமாய் பயிர்களுக்கு கொடுத்தார்.

உரம் வேலை செய்ததாயினும் நான்கைந்து நாட்களில் மடிச்சுக்கட்டி நோய் தாக்கம் செலுத்தியது.

கொடுத்த உரத்தில் ஏதேனும் குறையோ, அவசரமாய் விவசாய பார்மசியில் மருந்தெடுத்து மழையில்லா நேரம் பார்த்து அதைக் கொடுத்துக் குணமாக்கினார்.

அந்நேரம் 50 கிலோ அடங்கிய யூரியா உரம் இலவசமாக வழங்கப்படும் என்றொரு நற்செய்தி சுருதி எனும் வேதம் போல செவி வழி வந்துற்றது.

துள்ளிக் குதித்த அந்த விவசாயி பெருமகிழ்வோடு முன்னைய பற்றுச்சீட்டுக்கள், ஆள் அடையாள அட்டை, கமக்கார அமைப்புக்கு செலுத்திய பங்குப் பணச் சிட்டை என எல்லாவற்றையும் பொட்டலமாய் கொண்டேகி கமநல சேவை நிலையத்தை அடைந்தார்.

அங்கே நீண்டதொரு வரிசை. இலவச உரத்திற்கானது என்பதை உணர்ந்து கொண்ட அவர் தன் அடையாள அட்டையை அடுக்கிவிட்டு, வரிசையில் காத்து நின்றார்.

அவருக்கான நேரம் வந்தது. பட்டியல் பரிசோதிக்கப்பட்டது. ஐயா! உங்கட வயல் 61 பரப்பு. இங்கு 60 பரப்பும் அதற்குக் குறைவாகவும் இருந்தால்தான் 50 கிலோ யூரியா இலவசம்.

கடவுளே! ஒரு பரப்பைக் குறைத்து உறுதியில் எழுதுவதற்கு என்ர ஊழ்வினை விடவில்லையே.

நொந்து கொண்ட அந்த விவசாயி மீண்டும் மடிச்சுக்கட்டி நோய்க்கு மருந்தெடுக்க பார்மசிக்குப் போகிறார்.

ஆரு கண்டது 60 பரப்போட நிற்பாட்டுவினம் எண்டு. விவசாயின் நா தானாகக் சொல்லிக் கொண்டது.

(இந்தக் கதை எங்கள் கமத்தொழில் அமைப்புகளுக்குச் சமர்ப்பணம்.)

## ஜேர்மனியில் விபத்தில் சிக்கி வடமராட்சி இளைஞர் பலி

ஜேர்மனி வாகன விபத்தில் படுகாயமடைந்த வடமராட்சி இளைஞர் ஒருவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார்.

ஜேர்மனியில் தனிமையில் வசித்து வந்தவர் இரு கிழமைக்கு முன்னர் அங்கு விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழுந்துள்ளார்

சம்பவத்தில் செல்லத்துரை துஷ்சியந்தன் வயது 52 என்பவர் இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.(4-7)

## பண மோசடி; இருவர் கைது

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக தெரிவித்து பண மோசடி செய்த இருவர் சிலாபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

19 வயதான இளைஞரும் 45 வயதான பெண் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி 59 இலட்சம் ரூபாவிற்கும் அதிக பணத்தை மோசடி செய்துள்ளதாக சிலாபம் பொலிஸ் நிலையத்திற்கு 6 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நேற்று முன்தினம் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் நேற்று சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (4-7)

## உள்நாட்டு பால்மாவின் விலை அதிகரிக்காது

(கொழும்பு)

பால் மாவின் விலையை அதிகரிப்பதாக சில இறக்குமதியாளர்கள் தெரிவித்தாலும், ஹைலண்ட் பால்மா மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது பால்மா உற்பத்திகளின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என மில்கோ பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் ரேணுகா பெரேரா தெரிவிக்கின்றார்.

உள்நாட்டு பால்மாவிற்கான தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாது. ஆனால் அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றுவதால், பால்மா பாக்கெட்டுகளை விற்பனை செய்வதுடன் திரவப் பாலையும் ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அதிகரித்துள்ள வரிகள் மற்றும் செலவுகள் தமது நிறுவனத்தையும் பாதித்துள்ள போதிலும் பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என ரேணுகா பெரேரா குறிப்பிட்டுள்ளார். (4-7)

## 4 1/2 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈவினைப் பகுதியில் 4 1/2 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஈவினைப் பகுதியை சேர்ந்த 52 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படுத்தி மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4,7, 104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், மகாறம்பைக்குளம், மகாறம்பைக்குளம் (தாஸ் நகர்), மகாறம்பை குளம் பிள்ளையார் வீதியடி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வங்காலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அச்சுவேலியில் து.வண்டி திருத்தும் கடையில் திருட்டு

(அராலி)

அச்சுவேலி மேற்கு தென்மலை பகுதியில் உள்ள துவிச்சக்கர வண்டி திருத்தும் நிலையத்தினை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு போயுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த துவிச்சக்கர வண்டி திருத்தும் நிலையத்தின் முன் கதவினை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் துவிச்சக்கரவண்டி ஒன்று, ஐந்து ரயர்கள், பெட்டியில் இருந்த பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

நேற்று காலை கடையினை திறந்த பொழுது களவு போனமை தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலிமுகத்திடல் கலவரம்

# சவேந்திர சில்வா வழக்கிலிருந்து விடுவிப்பு



(கொழும்பு)

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த "கோட்டா கோ கம" போராட்டக் களத்தின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட 05 அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்பதாக உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தது.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடல் "கோட்டா கோ கம" போராட்டக் களத்தின் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கூறி லஹிரு சானக்க உள்ளிட்ட 05 சமூக செயற்பாட்டாளர்களால் இந்த 5 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

குறித்த மனுக்கள் உயர் நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பரிசீலிக்கப்பட்டது.

இந்த மனுவில் முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவருக்கு எதிராக விசாரணைகளை நடத்த எதிர்பார்க்கவில்லை என மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதன்படி, முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை வழக்கு நடவடிக்கைகளில் இருந்து விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (4)

# அனர்த்தங்களை சீர்செய்ய விசேட அமைச்சரவைப் பத்திரம்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்டுள்ள இடர் நிலைமைகளினால் நாட்டின் பல பாகங்களிலும் பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. அவ்வாறு சேதமடைந்த பாடசாலைகளின் தகவல்களையும் சேத மதிப்பீடுகளையும் அந்தந்த மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்களிடம் கல்வி அமைச்சு கோரியுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,

பாடசாலைகளின் தகவல்கள் கிடைக்கப் பெற்றதும் சேதங்களை சீர்செய்து பாடசாலைகளை உடன் இயக்கி மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை வழமைக்கு கொண்டு வர திட்டமிட்டிருக்கின்றோம்.

இதேவேளை, சீரற்ற கால நிலை காரணமாக பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மலையகத்தை பொறுத்தவரை பதுளை மாவட்டமே அதிகளவு சேதங்களை எதிர்நோக்கியுள்ளது. இங்கு சுமார் 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் இழந்து நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வீடுகளை முழுமையாக சீர்திருத்தம் செய்து வழமைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் விசேட அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்து தேவையான நிதியைப் பெற்று அவற்றை திருத்தம் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை உள்ளது. அதை அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் துரிதமாக மேற்கொள்வதற்கு உயர்மட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன் எனத் தெரிவித்தார். (4)

# அணு ஆயுத சோதனைகள் இல்லாத உலகத்தை உருவாக்கும் பயணத்தில் இலங்கை

## வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

அணு ஆயுத சோதனைகள் இல்லாத உலகத்தை உருவாக்க இலங்கை உறுதி பூண்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

வியட்நாமில் நடை பெற்ற 3 ஆவது CTBTO அறிவியல் இராஜதந்திரக் கருத்தரங்கின் உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அணு ஆயுத சோதனை குறித்து 1996 ஆம் ஆண்டு கையொப்பமிட்டதற்கு அமைவாக இலங்கை செயற்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் சுமார் 80 நாடுகளில் இருந்து விஞ்ஞானிகள், வல்லுநர்கள், சிவில் சமூகம் மற்றும் தூதுவர்கள் உட்பட 250 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து, இலங்கைக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கு அவர் நன்றி தெரிவித்தார். (4)

# சீத்தா எலிய ஆலயம் புனித பூமியாக பிரகடனம்



(நுவரெலியா)

நுவரெலியா சீத்தா எலிய ஆலய வளாகத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் தீர்மானம் ஒன்று நுவரெலியா பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக தவிசாளர் வேலு.யோகராஜா கருத்துத் தெரிவிக்கையில் நுவரெலியா வெலிமடை வீதியில் நுவரெலியா நகரத்திலிருந்து ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சீதை அம்மன் ஆலயத்திற்கு பெருந்திரளான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் சீதை அம்மன் பக்தர்களும் தின வருகை தருகின்றனர்.

இந்த ஆலயத்தின் புனிதத்தை பாதுகாப்பதற்காக ஆலய வளாகத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம்.

இந்தத் தீர்மானத்தை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவிடம் சமர்ப்பித்து, அவர் மூலம் ஜனாதிபதிற்கும் மேலும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அறிவித்து வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# இலகுரக புகையிரத சேவை; மீள ஆரம்பிக்க ஜப்பான் இணக்கம்

(கொழும்பு)

ஜப்பானின் கடன் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இரத்து செய்யப்பட்ட இலகுரக புகையிரத சேவை திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையை எட்டியவுடன் அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும் என ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடெனகி தெரிவித்தார்.

ருவான் விஜேவர்தன மற்றும் ஜப்பான் தூதுவருக்கிடையிலான சந்திப்பு ஜப்பான் தூதரகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போதே ஜப்பான் தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியவுடன் குறித்த வேலைத்திட்டத்தை மீள ஆரம்பிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்த பின்னர் ஜப்பான் அரசாங்கம் இலங்கையில் பல்வேறு முதலீட்டுத் திட்டங்களின் ஊடாக உதவுவதற்கு தயாராக உள்ளதாகவும் ஜப்பான் தூதுவர் தெரிவித்ததாக, ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன் போதும் இந்த வேலைத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்ததாகவும் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் கடன் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு - மாலம்பேயிற்கிடையிலான, இலகுரக புகையிரத சேவையை இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக இரத்து செய்தமையின் காரணமாக 597.8 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையொன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# வெளிநாட்டு ஊழியர்களால் 3 பில்லியன் டொலர்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பணம் அனுப்பப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்தில் தொழிலாளர்களின் பணம் 384.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு 355.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்பட்ட நிலையில் அந்த மாதத்தை விட 30 மில்லியன் டொலர் அதிகம் என அவர் கூறினார்.

2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 42 வீதம் அல்லது 113 மில்லியன் டொலர் அதிகரிப்பு எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணிக்கான புதிய ஊக்குவிப்பு திட்டம் கடந்த நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4)

## இலங்கையர்களுக்கு

# ஈ-விசா வழங்குவதை ஆரம்பித்தது இந்தியா

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு ஈ-விசா வழங்குவதை இந்தியா மீண்டும் தொடங்கியுள்ளது.

இது தொடர்பில் டுவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம், இந்தியாவிற்கு விஜயம் செய்யும் இலங்கையர்கள் இலகுவாக விசாவிற்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணம், வர்த்தகம், மாநாடுகள் மற்றும் பலவற்றிற்காக இந்தியாவிற்கு வர விரும்பும் இலங்கையர்களுக்கு இந்த வசதிகள் திறக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

டிரிபோலி பிளட்டுன் என அழைக்கப்படும் இலங்கை இரகசிய இராணுவ படைப்பிரிவின் முன்னாள் தலைவர் பிரபாத் ı¦லத்வத்த, 2018ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கீத் நோயரை சித்திரவதைக்கு உட்படுத்தியமை உட்பட்ட குற்றச்சாட்டுக்களில் தொடர்பு கொண்டிருந்ததாக தெரிவித்தே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த அதிகாரிக்கு அமெரிக்காவில் உள்ள அனைத்து சொத்து மற்றும் நலன்களும் தடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அவரது உடனடி குடும்ப உறுப்பினர்களும் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தகுதியற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். (4-7)

## அரச துறைகளில்...

எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர், இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு தரப்பினரை வெளிநாட்டுப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கான அனைத்து திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்கள் வெளிநாடு செல்வதற்கு தேவையான தொழில்திறன் பரீட்சைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4-7)



















## திருட்டில்...

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் அதிகாலை நிறுத்திவிட்டு சென்ற மோட்டார் சைக்கிளை திருடியமை, கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் வீதியில் பயணித்த யாழ்.மாநகர சபையில் கடமையாற்றும் ஊழியரின் தங்கச் சங்கிலி அறுத்தமை, அதே தினம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேலும் ஒருவரின் தங்க சங்கிலியினையும் அறுத்தமை, இளவாலை பகுதியில் இரண்டு வீடுகளை உடைத்து திருடியமை போன்ற பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரே கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள், நகைகள் பெருமளவு பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும்

கைது செய்யப்பட்டவருக்கு ஏற்கெனவே நீதிமன்ற திறந்த பிடிவிறாந்து காணப்படுவதாகவும் பல தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட போதிலும் தப்பிஓட முயற்சி செய்திருந்தவர் எனவும் கடந்த 26ஆம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலையில் யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தரின் பிடியிலிருந்து தப்பிச்சென்ற நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 25 வயதுடைய இளவாலைப் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று நீதிமன்றத்தில்முற்படுத்தப்படவுள்ளார். (4-7)

## வல்லையில்...

வடமராட்சி வல்லைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருமகள் சோதி வீதி நெல்லியடியை சேர்ந்த பூபாலகிருஷ்ணன் கவிதான்சன் (வயது-24) என்பவராவார்.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த அவர் லொறி ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயம் அடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,60)

## நிதி சேகரிக்கும்...

தொலைபேசியை திருடிச் சென்றுள்ளார்.

குறித்த முதியவர் வசிக்கும் வீட்டுக்கும் குறித்த நபர் சென்றபோது அவரை அனுசரித்த முதியவர் 100 ரூபாய் நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இதன்பேறு [illegible] அதிகமாக [illegible] முதியவரும் 500 ரூபாய் பணத்தினை வழங்கியிருந்தார்.

பின்னர் குடிப்பதற்கு கொஞ்சம் தண்ணீர் தாருங்கள் என கேட்க முதியவர் வீட்டுக்குள்ளே சென்றபோது முதியவரின் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கைத்தொலைபேசியை அபகரித்து சென்றுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-7,104)

## ஆடு, மாட்டி...

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியை கொண்டு செல்வதை நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (4-7)

## ஜனாதிபதி - ...

இருப்பினும், சந்திப்புக்கான இடம் மற்றும் நேரம் ஆகியன இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

அத்துடன், குறித்த பேச்சுவார்த்தையின் போது தேசியப் பேரவைக்கு அழைக்கப்பட்ட அரசியல் தலைவர்களையும் அழைப்பதற்கான அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்திருந்தார்.

அத்துடன் வரவு-செலவு கூட்டத் தொடருக்கு அடுத்த வாரத்தில் பேச்சுக்களை நடத்த முடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த அழைப்பு தொடர்பாக கடந்த மாதம் 25 ஆம் திகதி தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி, சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் கலந்துரையாடலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கடன்...

கடன் மறுசீரமைப்பு குறித்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சீனா சாதகமாக பதிலளித்துள்ளது என அதன் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவருக்கும் சீனப் பிரதமருக்கும் இடையிலான பேச்சின் பின்னர் இந்த நம்பிக்கையான பதில் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வாகனங்கள்...

லது வைபர்:- 070 350 0525 மின்னஞ்சல்- dmtvet@gmail.com, அவசர அழைப்பு இலக்கம்- 0113100152, தொலைபேசி/ தொலைநகல் - 011 266 9915, இணையத்தளம் - http://vet.lk/contact.html ஆகியவற்றின் மூலம் முறையிடலாம்.

அவ்வாறு முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் வாகன புகைப் பரிசோதனை செய்யும் உத்தியோகத்தர்கள் வாகன உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)



















## சுப்பர் பரிசு வெல்லப்பட்டுள்ளது

வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி லொத்தர் சபையின் சனிதா ரிக்கற் சீட்டிழுப்பினூடாக 07.12.2022 அன்று சுப்பர் பரிசான மூன்று கோடி இருபத்தாறு இலட்சத்து நாலாயிரத்து எழுநூறு முப்பத்தி ஒரு ரூபா (3,26,04,731.00) வெல்லப்பட்டுள்ளது. இவ் ரிக்கற்றினை அபிவிருத்தி லொத்தர் சபையின் மன்னார் விற்பனை முகவர் திரு.என்.மகேந்திரன் அவர்களால் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

என்.மகேந்திரன்
(C-5424) சின்னக்கடை, மன்னார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை.
விசா சேவைகள்
(C-5471)
**V2 TRAVELS**

எமது கிளைகள்
கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • தெல்லிப்பழை • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு

- பயிற்சிக்கால கொடுப்பனவு - 30,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## பராமரிப்பாளர் தேவை



நடக்க முடியாத முதியவரை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு அனுபவம் உள்ளவர் தேவை

தகுதி :- 40 வயதிற்குட்பட்ட ஆண்
சம்பளம் :- 50,000/=
(C-5471)

தொடர்புகளுக்கு :- 077 706 8777

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 076 097 3127**

## AL/ PHYSICS

விடைத்தாள் திருத்தும் அனுபவமிக்க விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் 23,24 Batch இற்கான தனிப்பட்ட குழு வகுப்பிற்கு தொடர்பு கொள்ள
(13722)
**077 600 4896**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் சின்னலுக்கு அருகாமையில், லஸ்சுமி மண்டபத்திற்கு முன் வீதியில் 50m தூரத்தில் 1 1/2 பரப்பு காணி சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
(13719)

**077 441 0919**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
(13675)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 43 வயது மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு
**077 905 8615**
வைபர் & வாட்ஸ்அப்
(13728)

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள். வீடுகள். கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

**1 சதுர அடி 130 /= இல் இருந்து**

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம் உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

உலகத்தரமிக்கது

வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்




(13731)

FINEX இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**North and East Engineering**
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
northandeastengineering.com

## இராஜ மருத்துவம்

பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்
மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள், தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை, மனநோய், நோவு, விஷகடிக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள 076 274 4488
வல்லை வீதி, சங்கானை
(C-5470)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985 இல் பிறந்த நற்குணமுள்ள உத்திரட்டாதி நட்சத்திரம் 4 இல் (சூரியன், செவ்வாய்) கிரகபாவம் 19 1/2 உள்ள லண்டனில் வசிக்கும் பட்டதாரி மணமகனுக்கு தகுதியான மணமகள் தேவை.
(13661)
**077 914 7318, 076 668 8199**(Viber)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

- Tvs Scooty peptt (BEG)
- Honda Lacustom (250 cc)
- Scooty Ranamoto Pattay(BEF)

**077 887 5037**
**075 887 5036**

## ஜெனரேற்றர் விற்பனைக்கு

- 30 Kva Pramac ஜெனரேற்றர் (media Spain) (sound proff)

**077 887 5037**
**075 887 5036**
(13727)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 112 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

**தரகர் தேவையில்லை**
(13732)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
**077 814 7389, 077 986 5457**


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



கடந்த 11.11.2022 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் செல்வராசா இராசம்மா

அந்தி பகலாய் நொந்து
சுமந்து பெற்ற அம்மாவே!
குலம் காத்து நலம் காத்த அம்மாவே!
கவிதையிலா கடன் தீர்ப்போம்!
சிந்தை குளிர நம்மை ஆதரித்த மாமி
நன்றிக் கடன் எங்கள்
அன்புக் காணிக்கை!
நாங்கள் நொந்து அழுதால்
எங்களுடன் அழும் பாட்டி!
எங்கள் துயரைப் பாருங்கள்!
அம்மா, மாமி, பாட்டி மைத்துனர் என
உறவெல்லாம் புலம்ப தவிக்க விட்டீர்கள்!
நெடு மரமாய் நிற்கின்றோம்!
திண்ணபுரத்தான் சந்நிதியில்
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
077 537 4494
077 817 1200
(13714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.